DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Joy H. Selvanayagam, Broker
Homelife/Future Reality Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com — Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX Realty Inc. Brokerage
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
e-mail : raj.p@rogers.com
RE/MAX Realtron Realty Inc., Brokerage

25வது ஆண்டை நோக்கி
Towards 25th Year in Publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
Tel : 416-752-1524
Fax: 416-752-6703

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX Community

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
- Family sponsorship;
- Super visa for parents and grandparents including health insurance;
- Citizenship;
- Permanent resident card renewal;
- Affidavits for Immigration purposes;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tel : 647-344-6600
4158, Kingston Road, Unit 3, Scarborough, ON, M1E 2M4
info@allinoneservices.ca, www.allinoneservices.ca

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
Lic# M15001465 Broker# 10530
416-908-5656
SUBRA MORTGAGE SOLUTIONS INC.
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

உதயம் 1280
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday October 16, 2020



# கொரோனா தொற்று காரணமாக காய்ச்சல் தடுப்பூசி பெறுவதில் தாமதத்தை எதிர்கொள்ளும் கனடியர்கள்

*(ஸ்காபுறோவிலிருந்து எமது செய்தியாளர் விக்னேஸ்)*

தற்போது உலகெங்கும் ஒரு பொதுவான பிரச்சனையாக உள்ள கொடிய கொரோனா தொற்று காரணமாக சாதாரண காய்ச்சல் தடுப்பூசி பெற்றுக்கொள்வதில் நீண்ட தாமதத்தை கனடியர்கள் எதிர்கொள்வதாக எமக்குக் கிடைத்துள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

வழமையில் இவ்வாறான சாதாரண காய்ச்சல் தடுப்பூசியை கனடிய அரசு இலவசமாகவே மக்களுக்கு வழங்கிவருகின்றது. இந்த தடுப்பூசியை பெற்றுக்கொள்வதற்காக கனடியர்கள் தங்கள் குடும்ப வைத்தியரை அல்லது மருந்தகங்களை நாடுவது வழக்கம்.

தற்போது மக்களை அச்சுறுத்திவரும் கொரோனாவின் காரணமாக, மக்கள் முன்னரிலும் பார்க்க அதிகளவில் சாதாரண காய்ச்சல் தடுப்பூசியை குத்திக் கொள்வதில் ஆர்வம் காட்டுவதாக ஒன்றாரியோ வைத்தியர்கள் சங்கத்தின் முக்கிய உறுப்பினர்களும், ஒன்றாரியோ மருந்தகங்கள் உரிமையாளர்கள் சங்கமும் பத்திரிகையாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மக்கள் அதிகளவில் தடுப்பூசியை இட்டுக் கொள்வதில் ஆர்வம் காட்டுவதற்குரிய இன்னொரு முக்கிய காரணம், அவர்கள் இந்த காய்ச்சல் தடுப்பூசியை இட்டுக்கொள்வதால் கொரோனாவின் பிடியிலிருந்தும் தப்பிக்கொள்ளலாம் என்று அவர்கள் நம்புகின்றார்கள் என்றும் சில குடும்ப வைத்தியர்கள் தெரிவித்துள்ளார்கள். ”எம்மை நாடி வரும் மக்களின் தொகைக்குரிய தடுப்பூசி மருந்து எமது உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. அதற்கு காரணம் போக்குவரத்துத் துறை சற்று மந்தமடைந்திருப்பதுவே ஆகும். மேலும் எமது வைத்தியர்களை நோக்கி அதிகளவு மக்கள் படையெடுக்கத் தயாராக உள்ள நிலையில் அதிகளவு தடுப்பூசி மருந்தை பெற்று எமது குளிரூட்டிகளில் வைத்திருப்பது கூட மருத்துவத்துறை கட்டுப்பாடுகளை மீறும் செயலாகும்”

இவ்வாறு தெரிவித்துளளார் ஒன்றாரியோ மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் டாக்டர். சமந்தா ஹில்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ”இந்த விடயத்தில் ஒன்றாரியோ அரசாங்கத்துடன் இணைந்த நாம் இந்த வைத்திய சேவையை திறம்பட ஆற்றுவதற்கு வாகனத்தை செலுத்திய வண்ணம் தடுப்பூசியை இட்டுக் கொள்ளும் திட்டத்தை அறிமுகம் செய்ய விண்ணப்பித்துள்ளோம்” என்றார்
து’’.

இதேவேளை ஒன்றாரியோ மருந்தகங்களின் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைமை அதிகாரியான விளக்கமளிக்கையில் ”ஒன்றாரியோ மாகாணத்தில் ஆங்காங்கே உள்ள மருத்துவ சிகிச்சை நிலையங்களில் சாதாரண காய்ச்சல் தடுப்பூசி மருந்தை போதியளவு கையிருப்பில் வைத்திருப்பதை உறுதி செய்தால் வைத்தியர்கள் மற்றும் மருந்தக உரிமையாளர்கள் அரசாங்கத்தோடு நல்ல முறையில் ஒத்துழைப்பை வழங்கலாம் ”என்று தெரிவித்தார்

இந்த விடயம் தொடர்பாக தனது கருத்தை வெளியிட்ட ஒன்றாரியோ மாகாணத்தின் சுகாதார அமைச்சர் திருமதி கிறிஸ்ரின் இலியட் அவர்கள் ” எமது அரசாங்கம் காய்ச்சல் தடுப்பூசி மருந்துகள் நிறைந்த பாரிய தொகைப் பெட்டிகளை எதிர்பார்த்துள்ளோம். அவை பெற்றுக்கொள்ளப்பட்டதும் தற்போது எதிர்பார்க்கப்படும் தட்டுப்பாடும் தடுமாற்றமும் நீங்கும்” என்று குறிப்பிட்டார்.

அமைச்சர் கூறிய கருத்தைத் தொடர்ந்து ஒன்றாரியோ சுகாதார அமைச்சைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் பத்திரிகையாளர்களுக்கு தகவல் தெரிவிக்கையில் ” கடந்த மாதம் தடுப்பூசி மருந்தைக் கொண்ட பாரிய கொள்ளளவங்கள் தங்களிடம் வந்து சேர்ந்துள்ளதாகவும் அவை தற்போது விநியோகம் செய்யப்பட்டு வருவதாகவும் இன்னும் தடுப்பூசி மருந்தை அதிகளவில் ஓடர் செய்துள்ளதாகவும் ”தெரிவித்தார். அத்துடன் கடந்த வருடத்தை விட இந்த வருடத்தில் சாதாரண காய்ச்சல் தடுப்பூசிக்குரிய தேவை சுமார் 16 வீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com
*North York *Scarborough *Mississauga *Brampton *Ajax

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 — 905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905 794 4404

# காணாமல் ஆக்கப்பட்ட மகனை தேடி வந்த மற்றொரு தாய் மரணமான துயரம்



வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட மகனை தேடி வந்த மற்றொரு தாயார் நேற்று முன்தினம் புதன்கிழமை உயிரிழந்துள்ளார். மட்டக்களப்பு – கொம்மாந்துறை செங்கலடியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான, சித்திரவேல் அன்னம்மா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். 1994 ஆம் ஆண்டு காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை 26 வருடங்களாக தேடி வந்த நிலையிலேயே இந்த துயரம் இடம்பெற்றுள்ளது. இவ்வாறாக பல தந்தையர்கள் மற்றும் அன்னையர்கள் தொடர்ந்து வடக்கிலும் கிழக்கிலும் தமது அன்பான உறவுகளைத் தேடித் தேடி காலத்தை கழித்தும், அவர் முகங்களைக் கூட காண முடியாதவர்களாக உயிர் துறப்பது, அனைவரையும் வருத்தும் ஒரு விடயமாகவே காண முடிகின்றது.

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX Realtron A Team

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
✓ Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

ZY RENOVATION
உங்கள் இல்லங்கள் அல்லது பண்ணை வீடுகள் ஆகியவற்றில் அழகிய திருத்த வேலைகளைச் செய்து கொள்ள எம்மை அழையுங்கள்
Interior: Staircase Refinishing/ Installation-Flooring/Installation Bathroom/ Kitchen/ Basement Renovations Additions & Extensions
Exterior: Fence/ Interlock/ Deck
ZY- Renovation Call: Ethan@ 647 995 5955

# MORTGAGE SOLUTIONS

## $50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

416.298.2777

$375 Mo.

www.mortgageSolutions.ca

SAVE UPTO 75% REFINANCE

MONTHLY SAVING $2,478



KIRUBA THANABALASINGHAM

Mortgage Agent Lic# M12002440

Ultimate Mortgage Group Lic 11995

info@mortgageSolutions.ca

Off: 416.298.2777

Dir: 416.894.9122

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.39% | | $1,563.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,563.00 |

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# கிழக்கின் கழுத்துகளுக்கு அருகில் காத்திருக்கின்றது 'கயிறு''

இலங்கையின் வடக்கும் கிழக்கும் தமிழர்களின் பிரதேசம் என்ற எக்காளத்தோடு வடக்கிலும் கிழக்கிலும் விடுதலைப் புலிகள் பெருமளவு நிலப்பரப்பை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஒரு ஆண்டுகள் பல, அவை ஒரு பொற்காலமாக விளங்கின.

இந்த இரண்டு மாகாணங்களும் இணைந்த ஒரு மாகாண சபை தமிழ்த் தேசியத்தை தளமாக விளங்கியது. ஆனால் விடுதலைப் புலிகளின் இருப்பையும் வடக்கு கிழக்கு மாகாண சபையின் இருப்பையும் நாம் இழந்த பின்னர், அவற்றின் தொடர்ச்சியாக இன்னும் பலவற்றை இழக்கத் தயாராகிவிட்டோம். எமது கண்களுக்கு முன்பாகவே நாம் விரும்பத்தகாத காட்சிகள் மேடையேறுகின்றன.

காணி அபகரிப்பைத் தட்டிக்கேட்ட மட்டக்களப்பு அரசாங்க அதிபர் சில மணி நேரங்களிலேயே அந்தப் பதவியிலிருந்து தூக்கி வீசப்பட்டார். ஆனாலும் புதிதாக நியமனம் பெற்ற தமிழ் அதிகாரி ஒருவருக்கும் அவரது காதுகளில் என்னென்ன விடயங்கள் ஓதப்பட்டிருக்கும் என்பது சிறு குழந்தைகளுக்கும் புரியக் கூடிய விடயம்.

நாம் மிக முக்கியமான விடயங்களைக் கவனிக்கவேண்டும். அதுவும் உடன-டியாக கவனமெடுக்க வேண்டும்.

கிழக்கில் முஸ்லிம் மக்கள் எண்ணினார்கள், விடுதலைப் புலிகள் தங்கள் இனத்தை அழித்து விடுவார்கள் என்று. இதையே முஸ்லிம் அரசியல்வாதிகளும் தங்கள் மக்களிடத்திலே சொல்லிக் கொண்டிருந்தார்கள். விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டால், அந்த அழிவு முஸ்லிம்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு கட்டியம் கூறும் என்றார்கள் முஸ்லிம் அரசியல் தலைவர்கள். அதற்காகவே இரகசியமாக அரசியல் செய்தார்கள்.

ஆனால் தற்போது எது இடம்பெற்றிருக்கின்றது. தமிழ்த் தேசியம் என்று இணைப்புக் கருவியானது துண்டாடப்பட்டிருக்கின்றது. கிழக்கில் தமிழ் மக்களது குரல்கள் மட்டுமல்ல, முஸ்லிம் மக்களது குரலும் அறுக்கப்பட்டுள்ளன. தமிழ் முஸ்லிம் அரசியல்வாதிகள் மௌனித்துவிட்டார்கள் என்ற இடத்திற்கே தமிழ் முஸ்லிம் மக்கள் அங்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்கள்.

பிரதி அமைச்சர் ஆங்காங்கே கடுகதிப் பயணங்கள் செய்து சில அபிவிருத்தித் திட்டங்களை திறந்து வைக்கின்றார் என்றால் அவற்றிக்கு நாளை என்ன நடக்கும் என்பது அவருக்குக் கூட தெரியாமலிருக்கலாம். அவருக்கு அருகில் முதல்நாள் அமர்ந்திருந்த அரசாங்க அதிபருக்கு அநீதி நடந்திருக்கின்றது. நாளை யாருக்குமே இது நடக்கலாம்.

இதற்கெல்லாம் பதிலாகத்தான் தற்போது கிழக்கில் நடைபெறும் பல அத்துமீறல் சம்பவங்கள் இடம்பெற்றுவருகின்றன.

'கிழக்கில் அரசாங்கம் நிலம் சம்பந்தமாக பலவித அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது. அதனால் கிழக்கு மாகாணத்தில் இன்று நிலப்பிரச்சினை பூதாகரமாக எழுந்துள்ளது.

கிழக்கில் அரசாங்கம் நிலம் சம்பந்தமாக பலவித அழுத்தங்களைப் பிரயோகிக்கிறது. இந்த இடத்தில் ஜனநாயகக்கட்டமைப்புகளை தொடர்ச்சியாகப் பேணவேண்டியது அங்கு வாழுகின்ற தமிழ் முஸ்லிம் மக்களது உடனடிக் கடமையாகும். அதேபோன்று திருகோணமலை திரி-யாய காணிப்பிரச்சினை மட்டக்களப்பு எல்லைக்காணி பிரச்சினை என நிறையப்பிரச்சினைகள் உள்ளன. இதில் தொல்பொருளியல் வனப்பாதுகாப்பு என பலதரப்பினர் சம்பந்தப்பட்டுள்ளனர்.

குறிப்பாக கிழக்கில் மட்டும் உருவாக்கப்பட்ட தொல்லியல் செயல-ணியை கேள்விக்குரியதாகும் திருகோணமலையில் தொல்லியல்செயலணியின் தாக்கம் கூடுதலாக உள்ளது. குறிப்பாக குச்சவெளி பிரதேசத்தில் மட்டும் அதிகூடிய 36 இடங்களில் காணிப்பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

எனவே வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாண சபை அமைவதும், இரண்டு மாகாணங்களும் புவிசார் தொடர்புகளை தங்கள் பண்பாட்டு கலாச்சார சமூகம் சார்ந்த விடயங்களோடு இறுக்கமாக்கிக் கொள்ளவேண்டும் என்பதையும் நாம் இந்த வார கதிரோட்டத்தின் மூலம் வலியுறுத்துகின்றோம். கிழக்கில் தமிழ் மக்களதும் முஸ்லிம் மக்களதும் குரல் நசுக்கப்பட்டு அந்த மக்கள் பலமற்றவர்களாக இருப்பதற்கு காரணம் மக்களல்ல, மாறாக தமிழ் முஸ்லிம் அரசியல்வாதிகள் தான் என்பதை அந்த மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். எனவே தங்கள் அழகிய மாகாணத்தையும் தமிழ்த் தேசியத்தையும் அதன் செழிப்பையும் தக்கவைத்துக்கொள்வதற்கு தங்கள் பிரதிநிதிகளுக்கு செய்திகளை அனுப்பிக் கொண்டே அவர்கள் தொடர்ச்சியாக இயங்க வேண்டும். அப்போது தான் அவர்களது கழுத்துக்களை நோக்கி வந்து கொண்டிருக்கும் 'கயிறுகள்' விலகிச் செல்ல வாய்ப்புக்கள் உண்டாகும்.

GHURUS TOWING

Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire

We pay scrap up to $1000



NIRMALAN (ROGER):
(416) 990-7777
(416) 984-7777

COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN:
(416) 894-6244

BASEMENT வாடகைக்கு உண்டு

Birchmount / Eglinton
சந்திப்பிற்கு அருகில்
2 bedroom basement with separate entrance
மற்றும் எல்லாவித வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
Close to TTC, subway, & shopping.
குடும்பம் விரும்பத்தக்கது.

Call: (416) 821-2181

விசேட வாழைஇலைச் சாப்பாடு. ஓடர் செய்து பெற்றுச் செல்லுங்கள்

ஸ்காபுறோவில்
மோர்னிங்சைட் - செப்பர்ட்
சந்திப்புக்கு அருகில்
வாழை இலைச்சாப்பாடு மற்றும் Lumprice ஆகியவற்றை ஓடர் செய்து பெற்றுச் செல்லுங்கள்.
வெள்ளிக்கிழமைகளில்
வாழை இலையில் 6 மரக்கறிகளுடன் சாப்பாடு - $6.50.
சனிக்கிழமைகளில் மட்டன், சிக்கன் Lumprice - $14.00 மட்டுமே.

Call: (416) 821-2181

SHARED WAREHOUSE WANTED

Looking for
shared warehouse space
(1000-1500 sq.ft.)
in Scarborough

Call:
(416) 421-3223

HELP WANTED

General help / delivery person needed for a flower shop.

Duties include:
- Putting the flowers in the water.
- Cleaning the shop and making a few deliveries using a company vehicle.

Must have a valid driver's licence.
Minimum of three days a week
(25 to 30 hours per week).

Call Varadhan:
(416) 288-1419
(716) 572-2939

சென்னையில் வீடு மனை வாங்க விற்க

தமிழ்நாடு சென்னையில் வீடு மனை மற்றும் ஆதனங்கள் வாங்க, விற்க எம்மை அணுகவும்.
Call: 98 417 25300
சென்னை, இந்தியா

# தமிழ்த் கட்சிகள் மீண்டும் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் கூடுகின்றன என்கிறார் 'மாவை'



எம் மத்தியில் உள்ள தமிழ்க் கட்சிகள் மீண்டும் நாளை யாழ்ப்பாணத்தில் கூடுகின்றன் அடுத்த கட்டம் பற்றி ஆராயப்படும் என்றார் மாவை சேனாதிராஜா.

திலீபனின் நினைவேந்தலுடன் இணைந்து செயற்பட்டுவரும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கான கூட்டம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நாளை சனிக்கிழமை காலை நடைபெறவிருக்கின்றது. இதற்கான அழைப்பை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோனாதிராஜா விடுத்திருக்கின்றார்.

"தற்போது சர்ச்சைக்குள்ளா-கியிருக்கும் 20 ஆவது திருத்தம், புதிய அரசியலமைப்பு உருவாக்கம் என்பவற்றுடன் எதிர்காலத்தில் இணைந்து செயற்படுவதற்கான வேலைத் திட்டங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் ஆராயப்படும்'' என மாவை சேனாதிராஜா செய்தி நிறுவனங்களுக்கு அனுப்பிவைத்த குறிப்பில் தெரிவித்தார்.

"ஏற்கனவே நாம் சந்தித்துப் பேசியிருக்கின்றோம். ஒரு உண்ணாவிரதப் போராட்டம், ஹர்த்தால் என்பவற்றை இணைந்து நடத்தியிருக்கின்றோம். இந்த நிலையில் அடுத்த கட்டச் செயற்பாடுகளையிட்டு நாம் ஆராய வேண்டியிருக்கின்றது. குறிப்பாக 20 ஆவது திருத்தச் சட்டம், புதிய அரசியலமைப்பு உருவாக்கம் என்பன குறித்து மற்றைய கட்சிகளின் கருத்துக்களை அறிய வேண்டியுள்ளது.

அதனைவிட தமிழ் மக்களுடைய உரித்துக்கள், அதற்கான என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து ஆராய்ந்து நாம் சில முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கின்றது. ஒன்றாக இணைந்து செயற்படக் கூடிய இந்த சந்தர்ப்பத்தில் அடுத்த கட்டமாக நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையிட்டு நாளைய சந்திப்பில் முக்கியமாக ஆராயவுள்ளோம்'' எனவும் மாவை சேனாதிராஜா பத்திரிகைகளுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்தார்.

இலங்கைச் செய்திகள்

# மட்டக்களப்பு அரச அதிபர் திடீரென பதவி மாற்றம் செய்யப்பட்டுள்ளார்



மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா திடீரென இடமாற்றம் செய்யப்பட்டு, புதிய அரசாங்க அதிபராக இலங்கை நிர்வாக சேவை விசேட தரத்தை சேர்ந்தவரும், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி மற்றும் காணி அமைச்சின் செயலாளராக கடமையாற்றியவருமான கே. கருணாகரன் நியமிக்கப்பட்டுள்ளார். இன்று பிற்பகல் அவர் நியமன கடிதத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

அரச அதிபராக கடமையாற்றிய திருமதி. கலாமதி பத்மராஜா, பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சிற்கு உடன-டியாக அமுலாகும் வரையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லை பகுதியான மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை காணிகளை அம்பாறை பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள சிலர் கிழக்கு மாகாண ஆளுநரின் உதவியுடன் அபகரித்தமை தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்ததன் பின்னணியிலேயே, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் நீக்கப்பட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

# முல்லைத்தீவு ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலை கண்டித்து மாபெரும் போராட்டம்!









முல்லைத்தீவு - முறிப்பு காட்டுப்பகுதியில் ஊடகவியலாளர்கள் இருவர் மீது மரக் கடத்தல் கும்பலினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை கண்டித்து முல்லைத்தீவில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இன்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டம் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன் ஆரம்பமானது.

தொடர்ந்து மாவட்ட வன அலுவலகம் முற்றுகையிடப்பட்டதுடன், அவ்வலுவலகம் முன்பாக மரங்கள் நாட்டப்பட்டது. அத்துடன், பொலிஸ் நிலையமும் முற்றுகையிடப்பட்டு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இறுதியில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

# ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் - மஸ்தான் MP




மிகவும் அர்ப்பணிப்புடனும் தியாகத்துடனும் செயற்படும் ஊடகவியலாளர்கள் மீது வன்முறையினை பிரயோகிப்போர் யாராக இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு உரிய தண்டனைகளைப் பெற வேண்டும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன் முல்லைத்தீவு பகுதியில் இடம்பெறுகின்ற சட்டவிரோத மரக்கடத்தல் தொடர்பில் செய்தி சேகரிப்பிற்கு சென்ற ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன். க.குமணன் ஆகியோர் மீதான மிலேச்சத்தனமான தாக்குதல்களை கண்டித்து காதர் மஸ்தான் அவர்கள் இன்று விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்ப்பட்டுள்ளதாவது பல்வேறு பட்ட க'டங்கள் சிரமங்களுக்கிடையே அர்ப்பணிப்போடு ஊடக தர்மங்களை பேணி தமது கடமைகளையாற்றும் ஊடகவியலாளர் மீதான தாக்குதல்களை எவ்விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

இவ்வாறான தாக்குதல்களை மேற்கொள்பவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு உரிய தண்டனை வழங்கப்பட்டு நாட்டின் ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாண பல்கலைக்கழக புதுமுக மாணவர்கள் மீது இம்சை வதை புரிந்த மாணவர்களுக்கு தண்டனைகள்




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புதுமுக மாணவர்கள் மீது இம்சை வதை புரிந்த சிரேஸ்ட மாணவர்களின் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு, அவர்களுக்குக் கடுமையான தண்டனைகளை வழங்குமாறு பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபை பரிந்துரைத்துள்ளது.என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

புதிய துணைவேந்தராகப் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பதவியேற்ற பின்னர், பல்கலைக்கழகத்தில் இம்சை வதையில் ஈடுபடுபவர்களுக்கெதிரான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்காக விரைவு பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட்டிருந்த நிலையில், குற்றம் இடம்பெற்று ஒரு மாத காலத்தினுள் தண்டனை அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையின் பரிந்துரைப் பிரகாரம், யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையைச் சேர்ந்த மூன்றாம் வருட மாணவர்கள் 4 பேருக்குக்கு ஒரு கல்வி ஆண்டு காலம் கல்வி கற்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதுடன், பல்கலைக்கழக அல்லது துறைசார் மாணவர் ஒன்றியப் பதவி நிலைகளை வகிக்க முடியாத வகையிலான தடையுத்தரவு மற்றும் கல்வி கற்கும் காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விடுதிகளில் தங்கியிருந்து கற்பதற்கான வசதிகளும் மறுக்கப்படல் வேண்டும் என்று பல்கலைக்கழக மாண-வர் ஒழுக்காற்றுச் சபை துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

அத்துடன் குற்றத்தின் பாரதூரத் தன்மை கருதி மாணவி ஒருவருக்குக் கடும் எச்சரிக்கையுடனான விலக்களிப்புக்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையின் இரண்டாவது கூட்டம் நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தின் போது, கடந்த மாதம் 03 ஆம் திகதி சித்த மருத்துவத்துறையில் இடம்பெற்ற இம்சை வதை தொடர்பிலான இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

சித்த வருத்துவத் துறையில் இடம்பெற்ற இம்சை வதை தொடர்பில் ஆரம்பகட்ட பூர்வாங்க விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, அதனடிப்படையிலான குற்றப்பத்திரிகை மீதான முறைசார் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, விசார-ணை அறிக்கை இன்று மாலை மாணவர் ஒழுக்காற்றுச் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையின் பரிந்துரைக்கமைய தண்டனைக்குரியவர்களுக்கான அறிவித்தல்கள் நாளை துணைவேந்தரால் அனுப்பி வைக்கப்பட இருக்கிறது.

பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையில், பல்கலைக்கழகத்தின் சகல பீடாதிபதிகளான பத்துப் பேரும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட இரண்டு பேரவை உறுப்பினர்களும், மாணவ ஆலோசகர் ஒருவரும், பிரதிச் சட்ட நிறைவேற்று அதிகாரி (புறொக்டர்) ஒருவரும், போதனைசார் விடுதிக் காப்பாளர்கள் இருவருமாக இருபது பேர் அங்கம் வகிப்பதுடன், பதிவாளரின் நியமனப் பிரதிநிதியாக மாணவர் நலச் சேவைகளுக்கான உதவிப்பதிவாளர் செயலாளராகவும் செயற்படுகின்றனர்.

இன்றைய கூட்டத்தில், சித்த மருத்துவத் துறை மாணவர்களுக்கான தண்டனைகள் பரிந்துரைக்கப்பட்டதுடன், இனிவரும் காலத்தில் இதே பொறிமுறையில் இம்சை வதையில் ஈடுபட்டு, குற்றம் நிரூபிக்கப்படுமிடத்து கற்றல் நடவடிக்கைகளுக்கான தடை, சிறப்புத் துறைகளைகளுக்கான தடை, முதலா-ம், இரண்டாம் வகுப்புச் சித்திகளுக்கான தகைமையிழப்பு, மகாபொல மற்றும் நிதியுதவிகளைத் தடை செய்தல், பல்கலைக்கழக அல்லது துறைசார் மாண-வர் ஒன்றியப் பதவி நிலைகளை வகிக்க முடியாத வகையிலான தடையுத்தரவு மற்றும் கல்வி கற்கும் காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விடுதிகளில் தங்கியிருந்து கற்பதற்கான வசதிகளும் மறுக்கப்படல் உட்பட கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் என்பதுடன், குற்றத்தின் தன்மையைப் பொறுத்து பல்கலைக்கழக மாணவர் பதிவு இரத்துச் செய்யப்பட வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

# உலகத் தமிழர்களை மேலும் தலை நிமிர்த்தவென அழைக்கின்றது "எழுமின்" வட அமெரிக்க மாநாடு

உலகில் மதிப்புறு மக்கள் இனமாக நாம் எழவேண்டுமென்ற வேட்கை நீறுபூத்த நெருப்பாக தமிழரிடையே இன்று இருக்கிறது.

தன்னெழுச்சியாகவும், சிறு குழுக்களாகவும் நூற்றுக்கணக்கான முயற்சிகள் நடந்தேறியும் வருகின்றன. The Rise - எழுமின் என்ற இயக்கம் இந்த வேட்கைக்கும், தொடர் முயற்சிகளுக்கும் புது விசையும் திசையும் தருகிறது. இரு ஆண்டுகளில் 20-க்கும் மேலான, நாடுகளில் துளிர்த்துவிட்ட தன்னம்பிக்கையுடன் வேரோட்டம் தேடி முன்செல்கிறது The Rise -எழுமின்.

அக்டோபர் 23, 24 நாட்களில் அமெரிக்க, கனடா நாட்டுத் தமிழர்கள் இணைந்து நடத்தும் The Rise - எழுமின் வட அமெரிக்க மாநாடு, உலகத் தமிழர்களுக்கு நம்பிக்கை தரும் சிறிய ஆனால் முக்கியமான திருப்புமுனையாக அமையுமென நாங்கள் நம்புகிறோம்.

அறவலிமையின் ஆன்ற தலைமையாக திரு.பாலா சுவாமிநாதன் திகழ, வட அமெரிக்காவில் தமிழ் வளர்த்த திரு. பால்பாண்டியன், Dr. சிகாகோ இளங்கோவன் போன்றோர் ஆசி நல்க, அறத்துடன் செயல் மறமும் கொண்ட திரு. ஆசீர் ஜஸ்டிபஸ் தலைமையில் புதியதொரு இளம் தலைமை முன் நிற்க களைகட்டுகிறது The Rise - எழுமின் வட அமெரிக்கா. வெற்றித் தமிழர்கள் பலர் உரையாற்றுகிறார்கள். புதிய பல முயற்சிகள் விவாதிக்கப்படும். மிக முக்கியமான வரலாற்றுத் தருணமாகிய அக்டோபர் 23, 24 மாநாட்டில் பங்கேற்க உலகத் தமிழ் தொழில்முனைவோர், திறனாளர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். பதிவுக் கட்டணம் இல்லை. usa.tamilrise.org இணைய வழியில் இன்றே பதிவு செய்யுங்கள்.

இந்தச் செய்தியினையும் தொடர்ந்து வரும் பரப்புரைப் படைப்புகளையும் உங்கள் சமூக வலைதளத் தொடர்புகளூடாகப் பரப்பிடவும் தமிழுரிமையுடன் வேண்டுகிறோம்.

கனடாவில் தொடர்புகளுக்கு dantont@canadiantamilcongress.ca

இங்ஙனம்,
மாநாட்டு அமைப்புக் குழு
The Rise - எழுமின், வட அமெரிக்கா
மற்றும் The Rise Global




# உலகத் தமிழர்களை இணைப்பதற்காக கனடா உதயன் பத்திரிகையோடு இணைந்துள்ள மூன்று உலகளாவிய இணையத்தளங்கள்

உலகத் தமிழர்களை இணைப்பதற்காக கனடாவில் கடந்த 25 வருடங்களாக வெளிவரும் உதயன் பத்திரிகையோடு இணைந்துள்ள மூன்று உலகளாவிய இணையத்தளங்கள் கூட்டாக விடுக்கும் அறிவித்தல் இங்கு காணப்படுகின்றது.

மேற்படி இணையத்தளத்தின் விலாசங்கள்: http://www.uthyaannews.ca http://www.nanban.ca http://www.voiceofilankai.lk



### யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்:

# இலங்கை பேரரசுகளின் விளையாட்டு மைதானமா?

“இந்து சமுத்திர பிராந்தியத்தில் இலங்கையின் அமைவிடத்தை கருத்தில் கொண்டு பூகோள அரசியல் சக்திகள் அதனை விளையாட்டு மைதானமாக மாற்றுவதற்கு அனுமதிக்கமுடியாது” இவ்வாறு கூறி இருப்பவர் இலங்கையின் வெளிவிவகார செயலாளர் ஜெயநாத் கொலம் பகே. கடந்த வாரம் கொழும்பில் நடந்த ஒரு நூல் வெளியீட்டு விழாவில் அவர் மேற்கண்டவாறு உரையாற்றியுள்ளார்.

ஆனால் இலங்கைத் தீவு ஏற்கனவே வல்லரசுகளின் விளையாட்டு மைதானமாக மாற்றப்பட்டு விட்டது. இவ்வாறு இலங்கை தீவு பேரரசுகளின் விளையாட்டுத் திடலாக மாறுவதற்கு இரண்டு அடிப்படைக் காரணங்கள் உண்டு. முதலாவது இலங்கை தீவை ஆட்சி செய்த அரசாங்கங்களின் வெளியுறவு கொள்கைகள். இரண்டாவது இனப்பிரச்சினை.

இதில் முதலாவதாக வெளியுறவுக் கொள்கையை பொறுத்தவரையிலும் இலங்கைதீவை மாறி மாறி ஆண்ட இருபெருங் கட்சிகளும் ஒன்றில் மேற்கை நோக்கிச் சாய்ந்தன அல்லது ஆசியாவை நோக்கி அதாவது மேற்கிலிருந்து ஒப்பீட்டளவில் விலகி கூட்டுக்களை வைத்துக் கொண்டன.சிறிமாவோ பண்டாரநாயக்காவின் காலத்தில் இலங்கை அரசாங்கம் அணிசேரா கொள்கையை கடைபிடிக்கப் போவதாக கூறியது.




எனினும் நடைமுறையில் அது ஆசிய மைய வெளியுறவுக் கொள்கை ஆகவே காணப்பட்டது. அக்காலகட்டத்தில் ஜேவிபியின் முதலாவது கிளர்ச்சியை ஒடுக்குவதற்கு இந்தியாவும் சீனாவும் சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு உதவி புரிந்தன.

அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த ஜெயவர்த்தன அமெரிக்காவின் விசுவாசியாக காணப்பட்டார். அவர் சிறிமாவோவின் உள்நாட்டு பொருளாதார கொள்கைக்கு எதிராக சிந்தித்தார். இலங்கை தீவை உலகளாவிய திறந்த சந்தை பொருளாதாரக் கட்டமைப்புக்கு திறந்து விட்டார். அதன் விளைவாக நாடு மேற்கு நோக்கி வேகமாக நகர லாயிற்று.

ஆனால் ஜெயவர்த்தன தனது மேற்கு நோக்கிய வெளியுறவுக் கொள்கையை நினைத்தபடி முன்னெடுக்க முடியாத ஒரு நிலைமையை இனப்பிரச்சினை உருவாக்கியது. அதாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக ஒரு ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்ற முடியாதே தவிர மற்ற எல்லாவற்றையும் செய்ய முடியும் என்று இறுமாப்போடு கூறிய ஜெயவர்த்தன நாட்டை முழுமையாக மேற்கை நோக்கிச் செலுத்த முடியவில்லை. அவரை வழிக்குக் கொண்டு வர சோவியத் சார்பு இந்தியா இனப்பிரச்சினையை ஒரு கருவியாக கையாண்டது. தமிழ் இயக்கங்களுக்கு பயிற்சியை ஆயுதங்களை மொத்தத்தில் பின் தளத்தை வழங்கி தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை ஊக்குவித்தது. ஊக்குவித்தது என்பதனை விடவும் சடுதியாக வீங்க செய்தது என்பதே சரி. இவ்வாறு வீங்கிய ஆயுதப்போராட்டத்தை எதிர்கொள்வதற்கு ஜெயவர்த்தனா மேலும் மேலும் மேற்கை நோக்கிப் போனார். ஒரு கட்டத்தில் இந்தியா நேரடியாகவே போரில் தலையிட்டது. அதன் விளைவாக உருவாகியதே இந்திய இலங்கை உடன்படிக்கை.

இந்தியத் தலையீட்டின் விளைவாக இனப்பிரச்சினை கையாள கடினமான ஒரு வளர்ச்சியை அடைந்தது. அதன் பக்க விளைவுகளில் ஒன்றாக விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவோடு முரண்பட்டது. அதனால் அந்த இயக்கம் மேற்கை நோக்கித் திரும்பியது. அதேசமயம் இந்தியா கொழும்பை நோக்கி நெருங்கியது.

ஜெயவர்தனாவிற்குப்பின் ஆட்சிக்கு வந்த இலங்கைத் தலைவர்கள் அவரிடமிருந்து கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையில் தமது வெளியுறவுக் கொள்கைகளை சுதாகரித்துக் கொள்ள முற்பட்டாலும் கூட இனப்பிரச்சினை அவர்களால் கையாள முடியாத ஒரு வளர்ச்சியை அடைந்து விட்டது. எனவே இனப் பிரச்சினையை மையமாக கொண்டே வெளியுறவுக் கொள்கையை தீர்மானிக்க வேண்டிய ஒரு வளர்ச்சி உருவாகிவிட்டது.

இந்தியத் தலையீட்டின் விளைவாக பிராந்திய மயப்பட்ட தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் இந்தியாவுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான முரண்பாட்டை அடுத்து மேற்கை நோக்கி விரிவடைந்தது. இவ்வாறு ஆயுதப்போராட்டம் மேற்கு மயப்பட்டதன் விளைவாக ஒருகட்டத்தில் மேற்கின் அனுசரணையோடு சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

இவ்வாறு ரணில் விக்கிரமசிங்கவின் காலகட்டத்தில் நோர்வேயின் அனுசரணையோடு முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

அதன் விளைவாக ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் தோல்வியுற்றார். அவரைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த மகிந்த ராஜபக்ச ஆசிய மைய வெளியுறவுக் கொள்கையை பின்பற்றப் போவதாக கூறிக்கொண்டார். அதன்படி இந்தியாவையும் சீனாவையும் ஏனைய ஆசிய நாடுகளையும் கையாள்வதன் மூலம் இனப்பிரச்சினையை வெற்றிகரமாக கையாள முடியும் என்றும் அவர் நம்பினார்.

நோர்வேயின் அனுசரணையுடன் சமாதான முயற்சிகள் முறியடிக்கப்பட்ட பொழுது மேற்கு நாடுகள் விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு குறிப்பிடத்தக்க அளவுக்கு எதிராக திரும்பின. இதன் விளைவாக மகிந்த ராஜபக்ச ஆசிய நண்பர்களின் நேரடி உதவியோடும் மேற்குலக நண்பர்களின் மறைமுக உதவிகளோடும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தோற்கடித்தார்.

எனினும், தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டதால் இலங்கைத் தீவின் வெளியுறவுக் கொள்கையில் இனப் பிரச்சினையின் தாக்கம் குறையவில்லை. ஏனெனில் யுத்த வெற்றியை முதலீடாகக் கொண்டு ராஜபக்சக்கள் வம்ச ஆட்சியை ஸ்தாபிக்க முற்பட்டார்கள். அதாவது ராஜபக்சக்கள் யுத்த வெற்றியை அரசியல் வெற்றியாக மாற்றத் தவறினார்கள். இதை இன்னும் தெளிவாகச் சொன்னால் இனப்பிரச்சினையை தீர்க்கத் தவறினார்கள். எனவே ஆயுத மோதல்கள் முடிந்த பின்னரும் இலங்கை தீவின் வெளியுறவுக் கொள்கையில் தாக்கம் செலுத்தும் ஒரு நிர்ணயகரமான விவகாரமாக இனப்பிரச்சினை தொடர்ந்தும் இருந்து வருகிறது.

இவ்வாறானதொரு பின்னணியில் சீனா உலகப் பேரரசாக படிப்படியாக மேலெழுந்து விட்டது. அதன் விளைவாக இலங்கைத் தீவு சீன விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக மாறத் தொடங்கியது. ராஜபக்சக்களின் யுத்த வெற்றி வாதம் அவர்களை அதிகமதிகம் சீனாவை நோக்கியே தள்ளியது. யுத்த வெற்றி வாதத்தின் தேவைகளும் சீன விரிவாக்கத்தின் தேவைகளும் ஒன்றுடன் ஒன்று பொருந்திப் போயின. இதன் விளைவாக முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்கு இலங்கைத் தீவு சீன மயப்படலாயிற்று. இவ்வாறு இலங்கை சீன பயப்படுவதை தடுக்கும் ஒரு முயற்சியாக மேற்கு நாடுகளும் இந்தியாவும் இணைந்து 2015ஆம் ஆண்டு ராஜபக்சக்களைக் கவிழ்த்தன.

இவ்வாறு மஹிந்த தோற்கடிக்கப்பட்ட போதிலும் கூட அவர் சீனாவிடம் பெற்ற கடன்களின் விளைவாக மைத்திரியின் காலத்தில் அம்பாந்தோட்டைத துறைமுகத்தை 99 ஆண்டு கால குத்தகைக்கு கொடுக்க வேண்டி வந்தது. அதாவது சீ-னாவின் கடன் பொறிக்குள் இச் சிறிய தீவு அகப்பட்டு விட்டது என்று பொருள். மேற்கின் விசுவாசியான ரணில் ஒரு கட்டத்துக்கு மேல் இந்த கடன் யதார்த்தத்தை மீறி எதையும் செய்ய முடியவில்லை.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியை அவருடைய பங்காளி ஆகிய மைத்திரிபால சிறிசேனவே காட்டிக் கொடுத்தார். அவரே யுத்த வெற்றி வாதத்தின் இரண்டாவது எழுச்சிக்குரிய வழிகளையும் திறந்து விட்டார். இப்பொழுது யுத்த வெற்றி வாதம் இரண்டாவது முறையும் ஆட்சிக்கு வந்திருக்கிறது. அதன்
வெளியுறவுச் செயலரும் முன்னாள் படைப் பிரதானியுமான கொலம்பகே இலங்கைத் தீவு பேரரசுகளின் விளையாட்டுத் திடலாக மாற அனுமதிக்கப் போவதில்லை என்று கூறியிருக்கிறார்.

தன்னைச் சந்தித்த சீன உயர் மட்டக் குழுவிடம் கோடாபய பின்வருமாறு கூறியுள்ளார்... “அம்பாந்தோட்டைத் துறைமுகம் ஒரு சீனக் கடன் பொறி அல்ல என்று நாங்கள் நிரூபிப்பதற்கு சீனா உதவ வேண்டும்”. ஆனால் இலங்கை தீவு ஏற்கனவே சீனமயப்பட்டு விட்டது. இலங்கை தீவின் வெளியுறவுக் கொள்கை தொடர்பாக சிந்திக்கும் எவரும் இப்புதிய சீன யதார்த்தத்தையும் உள்வாங்கித்தான் முடிவெடுக்கலாம். இதில் தமிழர்களும் விதிவிலக்கில்லை. இப்படிப்பட்ட ஒரு பின்னணியில் இனி இலங்கை தீவை பேரரசுகளின் மோதல் களமாக மாறாமல் தடுப்பது எப்படி?

முன்பு ராஜபக்சக்களோடு நெருங்கி உறவாடியவரும் இலங்கைக்கான ஐநாவின் வதிவிடப் பிரதிநிதியாக இருந்தவரும் அரசியல் விமர்சகரும் ஆகிய தயான் ஜெயதிலக இந்த வாரத் தொடக்கத்தில் பின்வருமாறு கூறியிருக்கிறார். “ராஜபக்சவின் அரசாங்கம் வெளியுறவு கொள்கையில் நடுநிலைமை தவறிவிட்டது”.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் வெளியிட்ட அறிக்கைக்கு இலங்கைக்கான சீனத் தூதுவர் எதிர் அறிக்கை வெளியிட்டிருந்தார். அதைப்போலவே இந்திய பிரதமருடன் மகிந்த ராஜபக்சவின் மெய்நிகர் உச்சி மாநாடு முடிந்த சில கிழமைகளுக்குள் சீன உயர்மட்ட தூதுக் குழு இலங்கைக்கு வந்திருக்கிறது. இக்குழு வந்த அதே காலப்பகுதியில் அமெரிக்க தூதரகத்தின் படைத்துறை அதி-காரி அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு விஜயம் செய்திருக்கிறார். அதோடு அமெரிக்க வெளியுறவுச்
செயலர் விரைவில் கொழும்பு வர இருக்கிறார். அமெரிக்கா மில்லேனியம் சவால் உடன்படிக்கை மூலம் கொடுக்க இருந்த நிதிக்கு சமமான நிதியை ஏற்கனவே இந்தியா இலங்கைக்கு வழங்கியிருந்தது. அதற்கு பின்னரும் அன்மையில் புதிய நிதி உதவிகளை இந்தியா வழங்கியிருக்கும் பின்னணியில் சீனா இலங்கைக்கு மேலும் ஒரு தொகுதி
நிதி உதவியை வழங்க போவதாக அறிவித்திருக்கிறது.

இவை எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் இலங்கை தீவு ஏற்கனவே பேரரசுகளின் விளையாட்டுத் திடலாக மாறிவிட்டது என்று தான் கூற வேண்டும்.எனவே இலங்கைத் தீவின் வெளியுறவுச் செயலர் கொலம்பகே கூறுவது போல இலங்கைத்தீவு அணிசேரா வெளியுறவுக் கொள்கை ஒன்றைக் கடைப்பிடிக்கவே முடியாது. ஒருபுறம் இலங்கைத்தீவு சீன மயப்பட்டுவிட்டது. இன்னொருபுறம் சீன விரிவாக்கத்திற்கு எதிராக அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து இந்தோ பசிபிக் மூலோபாயத் திட்டம் ஒன்றை முன்னெடுத்து வருகின்றன. இந்த இந்தோ பசிபிக் மூலோபாய திட்டத்தின் அடிப்படையில் சிந்தித்தால் இலங்கைத்தீவு வல்லரசுகளின் குத்துச் சண்டைக் களமாக மாறக்கூடிய வாய்ப்புக்களே அதிகம் உண்டு.

கடந்த ஐந்து தசாப்தங்களாக இலங்கைத் தீவின் வெளியுறவுக்கொள்கை எனப்படுவது இனப்பிரச்சினையோடு தவிர்க்கப்படவியலாதபடி பிணைக்கப்பட்டிருக்கிறது. ஒன்றில் வெளியுறவுக் கொள்கை இனப்பிரச்சினை மீது தாக்கத்தை செலுத்தும். அல்லது இனப்பிரச்சினை வெளியுறவு கொள்கையின் மீது தாக்கத்தைச் செலுத்தும். இந்த இருமுனை தாக்கங்களில் இருந்து விடுபட்டு வல்லரசுகளை எதிர் கொள்வது என்று சொன்னால் ஒரே ஒரு வழிதான் உண்டு. ஒன்றுபட்ட இலங்கையாக வெளிஉலகைக் கையாள்வதுதான். அது தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு தீர்வை வழங்கி இலங்கை தீவை ஒரு ஐக்கிய நாடாக கட்டியெழுப்புவதே. ஆனால் அது ஒரு அம்புலிமாமா கதையாக எப்பொழுதோ மாறிவிட்டது.



# தமிழரின் இரத்த ஆறு முள்ளிவாய்க்காலில் பெருக்கெடுத்து ஓடியபோது, கூத்தாடியவர் முத்தையா முரளிதரன்

## - கவிஞர் தாமரை விஜய் சேதுபதிக்கு எச்சரிக்கை



தமிழரின் இரத்த ஆறு முள்ளிவாய்க்காலில் பெருக்கெடுத்து ஓடியபோது, “இந்தநாள் இனிய நாள்” என்று அறிக்கை விட்டு விருந்துக் கூத்தாடியவர் முத்தையா முரளிதரன் - கவிஞர் தாமரை விஜய் சேதுபதிக்கு எச்சரிக்கை விஜய்சேதுபதி ஒரு வேண்டுகோள்! என்னை நீங்கள் அறிந்திருக்கலாம். உங்கள் படங்கள் சிலவற்றில் பாடல் எழுதியுள்ளேன். நேரில் சந்தித்திருக்கிறோமா என்று நினைவில்லை. கடந்த ஒரு வாரமாக உங்களிடம் தொலைபேசி வாயிலாக ஒரு செய்தி சொல்லிவிட வேண்டுமென்று காத்திருக்கிறேன். முத்தையா முரளிதரன் வாழ்க்கைப் படத்தில் நீங்கள் நடிக்க இருப்பதன் தொடர்பான பின்வினைச் செய்திகளை இப்போது நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கலாம். இந்த அளவுக்கு அது வளருமுன்பாகவே உங்களை எச்சரித்து விட வேண்டுமென்றுதான் விரும்பினேன். முரளிதரன் வெறும் கிரிக்கெட் வீரர், சாதனையாளர் என்றால் அதில் நீங்கள் நடிப்பதை யாரும் பொருட்படுத்தியிருக்க மாட்டார்கள். அவர் இலங்கையிலிருந்து இலங்கை அணிக்காக விளையாடி வந்தது கூட, தமிழர்களால் நடுநிலையாகவே பார்க்கப் பட்டுவந்தது.


ஆரம்ப காலத்தில் அது விமர்சனத்துக்குள்ளான போது, புலிகள் கோலோச்சிய காலத்தில், தேசியத்தலைவர் ““அவர் விளையாட்டுக்கு எந்த ஊறும் விளைவிக்க வேண்டாம், நம் பிள்ளை ஒருவர் விளையாடுகிறார் என்றே கொள்வோம்” என்று பெருந்தன்மையோடு கூறியதால் சர்ச்சை முற்றுப் பெற்று முரளிதரன் தொடர்ந்து விளையாட முடிந்தது. அன்று தலைவர் நினைத்திருந்தால், அன்றே முரளிதரனின் விளையாட்டு வாழ்க்கை முடிவுக்கு வந்திருக்கும். முரளிதரன் சிங்களவர்க்கிடையே ஒற்றைத் தமிழராக இருந்தது கூட பெரும் நெருக்கடியாக இருந்திருக்கலாம். தன் வாழ்விருப்பிற்காக அவர் சிங்களராகவே மாறியிருந்ததைக் கூட புரிந்து கொள்ளலாம். ஆனால், அவர் அந்த இடத்தில் நிற்கவில்லையே ஐயகோ!

சிங்களராக மாறியதோடல்லாமல் சிங்கள அரசியல்வாதியாகவும் மாறினார். தமிழ் மக்களைக் கொத்துக் கொத்தாகக் கொன்று போட்ட ராசபக்சேக்களின் ஒலிபெருக்கியாக அவதாரமெடுத்தார். தமிழரின் இரத்த ஆறு முள்ளிவாய்க்காலில் பெருக்கெடுத்து ஓடியபோது, “இந்தநாள் இனியநாள்” என்று அறிக்கை விட்டு விருந்துக் கூத்தாடினார். காணாமல் போன தம்வீட்டுப் பிள்ளைகளைத் தேடித் தலைவிரி கோலமாகத் தமிழ்த் தாய்மார்கள் கதறியதை, “நாடகம்” என்று வர்ணித்தார். இனப்படுகொலையை மறைக்க இலங்கை அரசு போடும் நாடகத்தில் இவர் பங்கேற்று வேடம் கட்டியிருப்பதை, தொழில்முறை நடிகனான உங்களால் எப்படி இனம் கண்டு கொள்ள முடியாமல் போனது மக்கள் செல்வனே?. அப்படியென்றால், அவர் உங்களைவிடத் திறமையான நடிகர் என்றுதானே பொருள்!? ஆக, உங்கள் வாழ்க்கையைப் படமெடுத்தால் முரளிதரனை நடிக்கச் சொல்லலாம் என்பதுதானே சரியாக இருக்கும்? வரலாறு பலகதைகள் சொல்லும் வி.சே.அவர்களே! அது தன்பாட்டுக்கு எழுதிப் போகும். எட்டப்பன் ஒரேயொரு குட்டிவேலைதான் செய்தான், இன்றளவும் “எட்டப்பன்” என்கிற பெயர் எப்படிப் பயன்படுத்தப் படுகிறது என்று தெரியுமல்லவா?. உங்கள் பெயர் அப்படியொன்றாக மாறிவிடக் கூடாது என்பதில் உங்கள் மேல் அன்பும் அக்கறையும் கொண்ட எங்களுக்கு பதைபதைப்பு இருக்காதா?



நானொரு சாதாரண பாடலாசிரியர். ஆனால் திரையுலகில் தமிழை உயர்த்திப் பிடிப்பதற்காகவே ஓடாத ஓட்டம் ஓடிக் கொண்டிருப்பவள், எத்தனையோ பாடல்களை மறுத்தவள், அதனால் எத்தனையோ நட்டங்களைச் சந்தித்தவள்! என்னது. நட்டமென்றா சொன்னேன்? மற்றவர்களின் அளவுகோலுக்குப் புரிவதற்காக அப்படிச் சொன்னேன். என் மொழிக்காக நான் ஓடுகிறேன், என் மக்களுக்காக நான் வதைபடுகிறேன், என் இனம் உயர்வதற்காக நான் வறுபடுகிறேன், இதில் நட்டமென்ன வந்தது நட்டம்? ஒரு தமிழ்ப்பெண் தன் “பங்களிப்பாக” இதைச் செய்தாள் என்றுதான் சொல்ல வேண்டும். ஆம், நட்டமல்ல, பங்களிப்பு என்பதே பொருத்தமான சொல்!. நாமென்ன போர்முனையில் துப்பாக்கி தூக்கிக் கொண்டு ரத்தமும் குண்டு சிதறலுமாக அலைந்தோமா? போராட்டங்களில் முன்வரிசையில் நின்று மண்டையடி வாங்கினோமா? அண்ணனைக் காணோம் அக்காவைக் காணோம் அம்மாவை சாகக் கொடுத்தோம் என்று பைத்தியமாக தெருக்களில் அலைந்தோமா? இசைப்பிரியாக்களின் ஒரு துண்டுத் துணியாகவாவது இருந்திருப்போமா? இல்லை அங்கு காயம் பட்டுக் கதறிய எம்குலக் குழந்தைகளுக்கு மஞ்சள் அரைத்துப் பணிபுரிந்தோமா?

ஒரு பாடலை எழுத மறுக்கிறோம், ஒரு படத்தில் நடிக்க மறுக்கிறோம் அவ்வளவுதானே? என்ன “நட்டம்”? நமக்குத் தெரிந்தவகையில் “பங்களி”க்கிறோம், அவ்வளவுதானே? நான் மறைந்தாலும் வரலாறு என்னை, தலை நிமிர்ந்த தமிழச்சியாகவே கொண்டாடும், நீங்கள் மறைந்தாலும் தமிழனுக்காக தடுத்தாடிய வீரனாகவே மகுடம் சூடும். தமிழர்களாகப் பிறந்து விட்டு, இந்தத் தன்மானம்கூட இல்லையென்றால் அப்புறமென்ன நமக்கு அகம், புறம், அடுப்படி, மூன்று வேளை சோறு? தமிழன் தாழ்ந்திருக்கும் காலம் இது!. காலக்கோளாறு இது! தமிழன் தாழலாம் ஆனால் வீழக்கூடாது. வீழ்த்த முனைபவர்கள் பலவேடமிட்டு வரத்தான் செய்வார்கள், ஏமாந்து விடக்கூடாது. நம் கையை எடுத்து நம் கண்ணையே குத்துவார்கள், தூங்கிவிடக் கூடாது.



முத்தையா முரளிதரன் ஒரு வரலாற்று எச்சில்! அதை நாம்தான் துப்ப வேண்டும். அது நம்மை நனைத்து விடக்கூடாது!. மக்கள் செல்வன் விஜயசேதுபதி அவர்களே, நல்ல முடிவாக எடுங்கள். என்ன ஆகிவிடும் என்று பார்க்கலாம்! உலகத் தமிழர் நம்பக்கம் இருக்கிறார்கள்.

பி.கு: சிறந்த நடிப்புக் கலைஞரான உங்களுடைய தோற்றப் பொருத்தம் இன்னொருவருக்கானது!. அதை ஏற்று நடியுங்கள், வரலாறு உங்களை என்னவாக எழுதுகிறது என்று பார்ப்போம்! தேசியத் தலைவர் மாவீரன் பிரபாகரன் வாழ்க்கை படமாகும் நாள் தொலைவிலில்லை! படம் வெளியிட்டிருக்கிறேன், கண்ணாடி முன்நின்று ஆயத்தப் படுத்திக் கொள்ளுங்கள் இவ்வாறு கவிஞர் தாமரை விஜய்சேதுபதிக்கு கடிதம் எழுதியுள்ளார்.



# அரசியலுக்கு அழகு முக்கியமானதல்ல! அது தகுதியுமல்ல!

**- ஏலையா க.முருகதாசன்**



குஸ்புவிற்கு கிட்டத்தட்ட இது நாலாவது கட்சித் தாவல். அதிமுக ஆட்சியிலிருந்தபோது திமுகவிலிருந்த குஸ்பு சினிமாத்துறையிலிருக்கும் நடிகைகள் எவரும் கற்புக்கரசிகள் அல்ல என்று தன்னையும் சேர்த்துச் சொல்ல அதை ஆமோதித்து "ஆம்" என்றவர் சுகாசினி.

முன்னாள் நடிகையான ஜெயலலிதா குஸ்புவின் அறிக்கையால் கோபமடைந்த அவர் மீது வழக்குத் தொடுக்க முனையும் போது அதிமுகாவில் இணைந்து தன்னைக் இணைத்தக் காத்துக் கொண்டவர் இவர். ஜெயா தொலைக்காட்சி ஒருபுறத்தில் அதிமுகாவின் பிரச்சாரகருவியாகவும், இன்னொருபுறத்தில் பெரும் வணிக நிறுவணமாகவும் செயல்பட்டது. அதிமுகாவிற்கு சென்ற குஸ்பு அங்கு நிகழ்ச்சி நடத்துனராகவும் செயல்பட்டார். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பெரும்பான்மையானவற்றில் அழகியல் எப்பொழுதுமே முதன்மைவகிக்கும்.

குஸ்புவின் அழகு ஜெயா தொலைக்காட்சிக்கு தேவைப்பட்டதால் அவர் நடிகைகளை கற்பற்றவர்கள் என்று சொன்னது நீர்த்துப் போயிற்று.

இவர் அதிமுகாவில் எதை எதிர்பார்த்துப் போனாரோ தெரியவில்லை எட்டாத பழம் புளிக்கும் என்ற நரியாரின் ஏமாற்றம் போல அவருக்கும் எட்டாத பதவி புளிப்பான பதவி என்று அங்கிருந்து பயணமானார் திமுக விற்கு.

திமுக என்பது சாதாரண கட்சியல்ல முற்போக்குச் சிந்தனையாலும் திடமான போராட்டங்களாலும் தொண்டர்களின் வியர்வைகளாலும் கட்டி எழுப்பப்பட்ட கட்சி அது. தமிழகத்தை மற்றைய மாநிலங்களை விட சிந்தனைப்புரட்சி மூலம் மாற்றத்தை கொண்டு வந்தவர்கள் திமுகாவினர்தான். திமுகா தமிழக மண்ணில் வேரூன்றி விழுதெறிந்து பரந்து நின்ற ஆலமரம் போன்றது. குஸ்புவிற்கு திமுகாவின் வரலாறு தெரியவே தெரியாது. நடிக நடிகைகள் அரசியலை பாலர் பாடம் போல பார்ப்பதற்கு அவரவர் உசுப்பேத்தல் இரசிகர்களே காரணம். அவரின் கணவர் நடிகை ரோஜா போல நீயும் அரசியலில் ஈடுபட்டால் தமிழக சட்டமன்ற உறுப்பினர் ஆகலாம் என்று ஆசை வார்த்தை கூறி உற்சாகப்படுத்தியிருக்கலாம், உசுப்பேத்தியிருக்கலாம்.

சினிமாவை தனது வளர்ச்சிக்கு பயன்படுத்திய கட்சிதான் திமுக என்றாலும் சினிமாகவர்ச்சி மட்டுமே அரசியலுக்கான தகுதியல்ல என்பது திமுகாவிற்கு நன்றாகவே தெரியும். இந்த வயதிலும் என்றும் மாறாத அழகிலிருக்கிறீர்களே என்று மேடைக்கு மேடை நிகழ்ச்சியாளர்களின் புகழாரத்தால் மகிழ்ந்துபோன குஸ்பு தனது அழகிற்கு, சினிமாமாயைக்கு திமுக தளவாதிகள் பதவி முடியை தலையில் அணிவிப்பார்கள் என எண்ணினார் அதிலும் ஏமாற்றமே.

அடுத்த பயணத்தை காங்கிரஸ் கட்சியை நோக்கி நகர்த்தினார்.அங்கும் அவருக்கு ஏமாற்றமே. காங்கிரஸ் கட்சியும் சாதாரண கட்சியல்ல. அது ஒரு தேசியக் கட்சி. காலத்திற்கு காலம் நடைபெறும் தேர்தல்களில், அவ்வப்போது காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்தாலும் நேருவையோ இந்திரா காந்தியையோ மக்கள் மறக்கமாட்டார்கள். அது படித்தபெரும் அரசியலாளர்களைக் கொண்ட கட்சி. இந்தியா என்ற உபகண்டத்தை வடிவமைத்த கட்சி. அக்கட்சியில் சேரவருபவர்களை அவர்களும் வருக வருகவென அழைத்தார்கள். எந்தக் கட்சியாகவிருந்தாலும் அதில் இணைபவர்களை மாலைசூட்டி பொன்னாடை போர்த்தி வரவேற்பது பண்பென்றும் சொல்லலாம் அரசியல் தந்திரம் என்றும் சொல்லலாம் அதைத்தான் காங்கிரஸ் கட்சியும் செய்தது. தனது கட்சியில் இணைய விரும்புவறின் அரசியல் அறிவு என்ன, கல்வித்தரம் என்ன, எத்துறையிலிருந்து அவர் வருகிறார் என்பதை அவர்கள் கூர்ந்து நோக்காமலா இருப்பார்கள்.

தான் ஒவ்வொரு கட்சியாக தாவத்தாவ ஒவ்வொரு கட்சிக்காரர்களும் இருகரம் கூப்பி வரவேற்கிறார்களே அவர்கள் தனக்கு கோவில் கட்டிய கோமாளிகள் போன்றவர்கள், குஸ்பு இட்லி சுட்ட வெருளிகள் போன்றவர்கள் என்று நினைத்த அவருக்கு அங்கும் ஏமாற்றமே. அவர்கள் குஸ்புவை வைக்கவேண்டிய இடத்தில் வைத்தார்கள். பாஜாகாவில் இணையவேண்டுமென்றால் அவர் காங்கிரஸ் காங்கிரசிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும். திட்டமிட்டு அவர் காங்கிரஸை விமர்சித்தார் வெளியேற்றப்பட்டார்.

தமக்கு எந்தெந்த வழிகளில் எவர் எவரை வைத்து ஆதரவைத் தேடலாம் வாக்குகளை அள்ளலாம் என்ற நோக்கத்தில் அவரின் அழகை பண்டமாற்றுச் செய்யலாம் என்ற அரசியல் தந்திரத்தை எல்லாக் கட்சிகளுமே கையாண்டன.

தமிழ்நாட்டில் பாரதிய ஜநாயகக் கட்சியகாலூன்ற முடியாமல் திணறுகின்றது. ரஜனிகாந்த் வருவாரா என்றால் அவர் வரவேண்டிய நேரத்தில் வருவேன் என்று அவரின் இரசிகர்களை குதூகலத்திலேயே வைத்திருக்கிறார்.

பாரதிய ஜனதாகட்சி குஸ்புவை அமோகமாக ஆராத்தி எடுத்துவரவேற்றிருக்கிறது. காங்கிரஸ் கட்சியிலிருந்தவர்களை ஒருமாதிரி உள்ளுக்குள்ளை கொண்டுவந்திட்டம் என்ற கள்ளச் சிரிப்புடன்: பார்த்துக் கொள்வார்கள் பாரதிய ஜனதாக் கட்சியினர்.

அவர்களுக்கு குஸ்பு அரசியல் அறிஞர் அல்ல அழகு சாதனம் .அவரும் அரசியலில் சைபரே. பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகமா நிலப்பொறுப்பாளரான தமிழிசை சௌந்தராஜன் ஆளுநராகத் தெலுங்கானா செல்ல, அவரளவில் மற்றவர்களின் திறமையில்லாதிருப்பதைக் கண்ட மாநிலப் பொறுப்பாளர் பதவி தனக்குக் கிடைக்கலாம் என்ற எண்ணம் கொண்டாரோ தெரியவில்லை கட்சி தாவிவீடார். அரசியல் நடவடிக்கைகளில் கட்சி விட்டு கட்சி மாறுபவர்களுக்கு தாவுதல் என்ற வார்த்தையை பயன்படுத்துவது உண்டு. தாவுதல் என்பதுமரம் விட்டுமரம் தாவும் குரங்கின் தாவுதலிலிருந்து வந்ததே இந்தத் தாவுதல் ஆகும். எனவே தாவித் தாவி பல கட்சிகளில் இருந்தவர் இப்பொழுது கடைசியாகத் தாவிய காங்கிரஸ் கட்சியிலிருந்து பாரதிய ஜனதாக் கட்சிக்குத் தாவியிருக்கிறார்.

தனக்கு இருக்கும் இரசிகர்களை கணக்கில் வைத்து நிருபர்கள் கேட்கும் கேள்விகளுக்கு அரசியல் சார்ந்து மதிநுட்பத்துடன் பதில் சொல்லத் தெரியாது கோபத்துடன் நிருபரை அவமதித்த குஸ்பு அரசியல் அறிவற்றவர் என்பதைக் காட்டியிருக்கிறார்.

பராதிய ஜனதாகட்சியின் பதவிப் பழத் தோட்டத்தில் பதவிப் பழம் கிடைக்குமா கிடைக்காத பதவிப் பழம் புளிக்குமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். அடுத்து குஸ்பு எந்தக் கட்:சிக்கு தாவுவார்.

S7 Food Court Veg-Non Veg

## வாடகைக்கு தேவை

இந்தியன் தமிழ் ஸ்டைல் ரெஸ்டாரன்ட் நடத்த இடம் வாடகைக்கு தேவை. இந்தியா தமிழ்நாடு, சென்னையில் இயங்கி வரும் S7 Food Court-ன் கிளையை திறக்க 1000 sqft Building மற்றும் car parking வாடகைக்கு தேவை.

Contact:

S7 SIVAN KUTTY
[Owner & Founder of S7 Groups]

#24,25 AVM CINE LAB CAMPUS, NSK salai vadapalani, Chennai, Tamilnadu, India

Land Line ; +91 44 48685857

Whatsapp & call ; +91 9445859988

Email ; sivankuttythankamony@gmail.com

S7 PRODUCTIONS

## தமிழ் சினிமா தயாரிப்பிற்கு பாட்னர்கள் தேவை.

2 கோடி ரூபாய் பட்ஜெட்டில் தமிழ் திரைப்படம் தயாரிப்பிற்கு பாட்னர்கள் தேவை. ரூபாய் 10 லட்சத்திலிருந்து ஒப்பந்த அடிப்படியில் முதலீடு செய்யலாம்.

Duration: 6 months
Profit: 50%

Contact;
Producer: S7 Sivan Kutty
S7 PRODUCTIONS

Address;
#42 AVM CINE LAB CAMPUS, NSK salai vadapalani, Chennai, Tamilnadu, India.

Land Line ; +91 44 48685857

Whatsapp & call ; +91 9445859988

Email ; sivankuttythankamony@gmail.com

குறிப்பு;
ரூபாய் 2 கோடி வீதம் 2 படங்கள் தயாரிக்கப்படுகிறது.

# உலகின் முதல் விஞ்ஞானி காட்டிடை வாழ்ந்த மனிதனே!

- ஏலையா க.முருகதாசன்



உலகின் முதல் விஞ்ஞானி யாரென்றால், எந்தத் தயக்கமும் இல்லாத பதிலாக வெளிவருவது காட்டில் வாழ்ந்த மனிதனே என்றபதில்தான்.

விஞ்ஞானத்திற்கு எண்ணங்களே தோற்றுவாயாக இருக்கின்றன. எண்ணங்கள் சிந்தனைக்கு அத்திவாரம் இடுகின்றன. தொடர்சசியான சிந்தனை புதிய விஞ்ஞானக் கருவிகளை,
தொழில்நுட்பக் கருவிகளைக் கண்டுபிடிக்க காரணமாகின்றன.

தற்செயலாக நடக்கும் சம்பவங்களே பெரும்பாலான விஞ்ஞானக் கருவிகளைக் கண்டுபிடிக்க அடிகோலியிருக்கின்றன. எந்தவொரு விஞ்ஞானக் கண்டுபிடிப்பும் தனியொருவரின் சிந்தனையால்: கண்டுபிடிக்கப்படவில்லை. பலரின் சிந்தனைகளின் நீட்சியேவிஞ்ஞானக் கண்டுபிடிப்பகளாகும்.

அப்பிள் மரத்திலிருந்து விழுந்த அப்பிள் பழம் மேல் நோக்கிப் போகாமல் கீழ்நோக்கி நிலத்திலே ஏன் விழுந்ததுஎன்ற ஐசாக் நியூட்டனின் தொடர் சிந்தனையே புவியீர்ப்பைக் கண்டுபிடிக்க ஏதுவாகியது. அவருக்கு முன்னர் பழமோ பொருளோ பூமியை நோக்கி விழுவதைக் கண்டபலர் ஏன் விழுகிறது என்று அதைப் பற்றியே தொடராக சிந்தித்திருக்கமாட்டார்கள். ஐசாக் நியூட்டன் ஏன் கேள்வியைக் கேட்டுவிடையைக் கண்டுபிடித்தார்.

ஜோர்ஜ் ஸ்ரீபென்சன் என்ற இளைஞன் அடுப்படிக்குள் இருந்து உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, தாயார் தண்ணீரைக் கொதிக்கவைத்த கேத்தல் மூடியை கொதித்த நீரின் ஆவி உந்தித் தள்ளியதைக் கண்ட அந்த இளைஞன் எது உந்தித் தள்ளுகிறது ஏன் உந்தித் தள்ளுகின்றது என்று தொடராகச் சிந்திக்கத் தொடங்கியதால் தான் நீராவிக்கு உந்தித் தள்ளும் வலு உண்டென்பதைக் கண்டு நீராவி இயந்திரத்தை கண்டு பிடித்தமையே புகைவண்டியின் தோற்றுவாயாகும்.
இத்தனை விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்கும் முன்னோடியானவன் மானிட வரலாற்றின் முதல் படியிலிருக்கும் காட்டு மனிதனே என்றால் அதை மறுக்கமுடியாது.

காட்டு மனிதனின் முதல் ஆயுதமே கற்கள்தான். ஒரு கல்லால் இன்னொரு கல்லை உடைத்தும் உரசியும் மிருகங்களைத் தாக்குவதற்காக ஆயுதம் செய்தபோது உரசிய கல்லிருந்து பறந்த தீப்பொறிகள் அருகிலிருந்து சருகுக-ளில் பட்டு தீ எரியத் தொடங்கியது. முதலில் தீயைக் கண்டு அஞ்சிய மனி-தன் அது என்னவாக இருக்கும் என்று மெது மெதுவாக அருகில் சென்றான், தீ எனறால் அதன் தன்மை எதுவென்று அறியாத அவன் தீயைத் தொட்டுப் பார்க் கையில் தீயினால் அவன் உடலில் வலியும் காயமும் ஏற்படதீயின் தன்மையை உணர்ந்தான்.

தற்செயலாக தீயினால் சுடப்பட்டு வெந்த இறைச்சியைச் சாப்பிட்டபோது அதன் சுவை பச்சை இறைச்சியைவிட வேறாக சுவையாக இருப்பதைக் கண்ட காட்டு மனிதன் இறைச்சிகளை காய்கறிகளை தீயிட்டு சாப்பிடத் தொடங்கினான். ஒவ்வொரு சிந்தனையின் முடிவிலும் இன்னொரு அரிய சிந்தனை பிறக்கும்.

ஐசாக் நியூட்டனையும், ஜோர்ஜ் ஸ்ரீபென்சனையும் தற்செயலாக நடந்த சம்பவங்கள் அவர்களின் உற்று நோக்குதலால் அவர்களை விஞ்ஞானிகளாக்கியது. காட்டு மனிதனின் வாழ்வியல் சூழ்நிலை அவனைச் சிந்திக்க வைத்தது. காற்றையும் தீயையும் மழையையும் கண்டு அஞ்சி நடுங்கிய அவன் நாளடைவ-ில் அவற்றுக்கு பழக்கப்பட்டவனாக, அவற்றை தனது வாழ்வுக்கு உகந்ததாக மாற்றினான். தீயைக் கண்டு அஞ்சிய மனிதன், தீயைக் கண்டு ஓடிய ஐந்தறிவு படைத்த விலங்கினங்கள் ஏன் ஓடுகின்றன என தற்செயலாக கண்டறிந்ததனால் விலங்குகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளதீ மூட்டி அதனை அர-ணாகப் பாவித்துத் தன்னைத் தற்காத்துக் கொண்டான்.

மானிட வரலாறு காட்டு மனிதனிலிருந்து தான் அரம்பித்தது என்ற மானிட வரலாற்று ஆய்வாளர்களின் கூற்றப் படிபார்த்தால், காட்டு மனிதனிலிருந்து தான் விஞ்ஞானிகள் தோன்றினார்கள் என்றால் மறுப்பதற்கில்லை.



எமது அறிதலுக்கும் அனுபவத்திற்கும் உட்பட்ட பல சமகால நிகழ்வுகளை உற்றுநோக்கின், ஒவ்வொரு சமகால மனிதர்களின் சிந்தனைபோல அதற்கடுத்த சமகால மனிதர்களின் சிந்தனை இருப்பதில்லை. வெறும் காடுகளாகவும் நிலம் பாறைகளாகவும் ஆறு குளம் கடல்களாகவும் இருந்த இந்தப் பூமி மானிடவர்க்கத்தினால் தான் இந்த வளர்ச்சியடைந்திருக்கின்றதெனில், மானிடவர்க்கத்தின் வரலாறு எங்கிருந்து ஆரம்பித்ததோ அங்கிருந்தே அந்த மனிதர்களின் சிந்தனையே இன்றைய விஞ்ஞான நீட்சியாகும்.

எனவே தீயைக் கண்டு பிடித்து அதை தனதாக்கிய காட்டு மனிதனே முதல் விஞ்ஞானி என்பதை மறுக்கமுடியாது.

விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் என்றால் அவை இன்று மானிட உலகம் அனுபவிக்கும் கணணியுக டிஜிட்டல் உலக கண்டுபிடிப்புகள் மட்டுந்தான் என்று எண்ணுவது தவறு. மானிட வாழ்க்கையின் ஒவ்வொரு படிநிலையும் தொடர்ச்சியான சிந்தனைக்: குட்பட்ட வளர்ச்சியேயாகும்.

துலாவும் விஞ்ஞானக் கண்டு பிடிப்புத்தான், ஓலையை வார்ந்து ஒன்றுடன் ஒன்றுபின்னி இழைத்தால் பெட்டியாகும் கடகமாகும் என்பதும் விஞ்ஞானக் கண்டுபிடிப்பேயாகும்.


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்ளது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

# முத்தையா முரளிதரனின் வேடத்தில் விஜய்சேதுபதி நடிப்பதிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும்

**முள்ளிவாய்க்காலில் தமிழர் இனவழிப்பை நடத்திய ராஜபக்சேவுக்கு ஆதரவளித்த முத்தையா முரளிதரனின் வேடத்தில் விஜய்சேதுபதி நடிப்பதிலிருந்து விலகிக் கொள்ள வேண்டுமென கடிதமெழுதியுள்ளார் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் பொதுச் செயலாளர் தியாகு**



அன்பிற்குரிய விஜய் சேதுபதி அவர்களே! வணக்கம்.

நீங்கள் இலங்கையின் கிரிக்கெட் விளையாட்டு வீரர் முத்தையா முரளிதரன் வேடத்தில் ஒரு திரைப்படத்தில் நடிப்பதாக "முதல் தோற்ற விளம்பரங்கள்" வந்துள்ளன. இவையே கடைசித் தோற்ற விளம்பரமாகவும் இருந்து விட்டால் நல்லது. இதற்கு மேல் நீங்கள் இந்தப் படத்திலிருந்து விலகிய செய்தி தவிர வேறு எதுவும் வராமலிருக்க வேண்டும் என விரும்பும் தமிழர்கள் சார்பில் உங்களுக்கு இந்த மடல். உங்கள் முகவரி எனக்குத் தெரியாது. ஆனால் எப்படியும் இந்த மடல் உங்கள் பார்வைக்குச் சென்று விடும் என்ற நம்பிக்கையுடன் எழுதுகிறேன். ஒரு நடிகர் என்ற முறையில் எந்தக் கதைமாந்தராகவும் நடிக்க உங்களுக்கு உரிமையுண்டு, அதுதான் உங்கள் "தொழில் தர்மம்" என்பதில் ஐயமில்லை. முத்தையா முரளிதரனைப் பொறுத்த வரை உலக சாதனை புரிந்த ஒரு தலைசிறந்த கிரிக்கெட் வீரர் என்பதில் மறுப்புக்கே இடமில்லை. ஆக, அவராக நீங்கள் நடிப்பது உங்கள் இருவருக்குமே இயல்பாகப் பெருமை தரக் கூடியது என எடுத்த எடுப்பில் தோன்றத்தான் செய்யும். ஆனால், நீங்கள் நடிகர் என்பதோடு குறுகிய காலத்தில் தமிழ் மக்களின் அன்பைப் பெற்ற தமிழ்க் கலைஞராகவும் விளங்குவதற்கு உங்கள் நடிப்புத் திறன் மட்டுமே காரணமன்று. அறம் சார்ந்த முற்போக்குக் கண்ணோட்டமும் உடையவராகத் தமிழ் மக்களிடையே நீங்கள் கொண்டிருக்கும் படிமமும் சேர்ந்துதான் உங்களுக்குப் புகழ் சேர்த்துள்ளது எனக் கருதுகிறேன். முத்தையா முரளிதரன் கிரிக்கெட்டில் சுழற்பந்து வீச்சாளர் மட்டும்தான் என்றால் இந்த மடல் எழுத வேண்டிய தேவையே எழுந்திருக்காது.

2009 மே மாதம் முள்ளிவாய்க்காலில் உச்சம் கண்டதே சிங்கள அரசின் தமிழர் இனவழிப்பு, போரின் இறுதிக் கட்டத்தில் மட்டும் சற்றொப்ப ஒன்றரை இலட்சம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்களே, குடும்பத்துடன் சரணடைந்தவர்கள் உட்பட பல்லாயிரம் தமிழர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டார்களே, இந்த உண்மைகள் எல்லாம் உங்களுக்குத் தெரியும், முத்தையா முரளிதரனுக்கும் தெரியும். ஆனால் இந்தக் கொடிய இனவழிப்பைத் தலைமையேற்று நடத்திய இராசபட்சேக்களுக்கு முரளி ஆதரவு தெரிவித்தவர் என்பது உங்களுக்குத் தெரியுமா? தமிழரான அவர் இனவழிப்பின் நிறைவை மகிழ்ந்து கொண்டாடி சிங்களப் பேரினவாதிகளுக்குத் தன் விசுவாசத்தைக் காட்டிக் கொண்டவர் என்பது உங்களுக்குத் தெரியுமா? ஒன்றரை இலட்சம் உயிர்களை மாய்த்த கொலைகாரச் சாதனையை முத்தையா முரளிதரன் இரசித்துச் சுவைத்தார் என்பது தெரிந்த பின்னும் 800 விக்கெட்டுகளைச் சாய்த்த அவரது "தூஸ்ரா"வை இரசிக்கவும் கொண்டாடவும் தமிழர்களுக்கு எப்படி மனம் வரும்? அருள்கூர்ந்து எண்ணிப்பாருங்கள் விஜய்! ஈழத் தமிழர்களுக்கு எதிரான இனவழிப்புப் போர்க் காலத்தில் நடந்த போர்க் குற்றங்கள், மானிடப் பகைக் குற்றங்கள். மாந்தவுரிமை மீறல்கள் பற்றியெல்லாம் வந்துள்ள ஐநா அறிக்கைகள். மாந்தவுரிமைப் பேரவைத் தீர்மானஙகள், சேனல் நான்கின் ஆவணப் படங்கள் இவை குறித்தெல்லாம் உங்களுக்குத் தெரியாமலிருக்காது என நம்புகிறேன். எவ்வளவு தரவுகள் தேவையானாலும் உங்களுக்கு அனுப்ப தமிழ் இளைஞர்கள் அணியமாய் உள்ளனர். உங்களைப் போன்றவர்களை இழந்து விடக் கூடாது என்ற அக்கறை தவிர வேறு நோக்கமில்லை.

நீங்கள் நினைக்கலாம், யாரோ சிலர் விடுக்கும் வேண்டுகோளை மதிக்க வேண்டுமா என. இல்லை, விஜய். இது உலகத் தமிழினத்தின் ஒன்றுபட்ட இதயத் துடிப்பு என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இலங்கையில் நடந்தது இனக்கொலை என்று தமிழகச் சட்டப் பேரவையும் சிறிலங்காவின் வட மாகாண சபையும் ஒருமனதாக இயற்றிய தீர்மானங்களை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இலங்கையைப் புறக்கணிக்கும் கோரிக்கையின் தொடர்ச்சியாகத்தான் அப்போதைய முதலமைச்சர் மாண்புமிகு ஜெயலலிதா அவர்கள் சென்னையில் இலங்கை வீரர்கள் விளையாடும் ஐபிஎல் போட்டிகள் நடத்தத் தடை விதித்தார் என்பதை நினைவிற்கொள்ளுங்கள்.

இன்றளவும் சன் முதலாளி கலாநிதி மாறன் தனது ஐதரபாத் சன்ரைசர்ஸ் அணிக்குப் பந்துவீச்சுப் பயிற்சியாளராக விலைக்கு வாங்கி வைத்துள்ள முத்தையா முரளிதரனை அன்று தமிழகத்தின் சார்பில் அப்போதைய முதலமைச்சர் ஜெயலலிதா உள்ளே விட மறுத்தார். இன்று அதே முரளிதரனின் படிமம் உங்கள் அரிதார வடிவில் தமிழ்நாட்டுக்குள்ளும் புலம்பெயர் தமிழுலகத்துக்குள்ளும் நுழையும் முயற்சி பத்துக் கோடித் தமிழர்களையும் இழிவுபடுத்துவதல்லவா? விளையாட்டிலும் கலையிலும் அரசியல் கலக்கலாமா? என்று ஒரு கலப்படக் கும்பல் கிளம்பி வரும். அவர்களுக்கு நீங்கள் எடுத்துக்காட்ட வேண்டிய சில வரலாற்றுப் பக்கங்களை உங்கள் பார்வைக்குக் கொண்டுவர விரும்புகிறேன். "கொழும்புக் கொழுப்பைக் கரைக்கும் அரசியல் எது?" என்ற கட்டுரையில் தோழர் நலங்கிள்ளி புரட்டிக் காட்டும் அந்தப் பக்கங்கள் உங்கள் பார்வைக்கு: தமிழகத்தில் அனைவரும் அறிந்த பெயர் மார்லான் பிராண்டோ. ஆலிவுட்டின் பெரும் நடிகர். சிவாஜி கணேசனைத் தமிழகத்தின் மார்லான் பிராண்டோ என்று தமிழ்த் திரைச் சுவைஞர்கள் போற்றிய போது, இல்லை, மார்லான் பிராண்டோதான் அமெரிக்காவின் சிவாஜி என்றார் அறிஞர் அண்ணா. மார்லான் பிராண்டோ நாயகனாக நடித்த "காட்.ஃ.பாதர்" நீங்களும் பார்த்திருப்பீர்கள். இப்படிப்பட்ட நடிகர்தான் உலகத் திரைப்பட நடிகர்களுக்கும் இயக்குநர்களுக்கும் திரைக்கதை ஆசிரியர்களுக்கும் தயாரிப்பாளர்களுக்கும் 1961இல் ஒரு கோரிக்கை விடுத்தார். ஒரு படத்துக்கு ஒப்பந்தமாகும் முன்பு அப்படத்தைத் தென்னாப்பிரிக்காவில் திரையிடக் கூடாதென ஒப்பந்தம் செய்து கொள்ளும்படி அவர்களைக் கேட்டுக் கொண்டார். ஏன் தெரியுமா? தென்னாப்பிரிக்க வெள்ளை நிறவெறி அரசு, கறுப்பின மக்களை எதிர்த்து இனஒதுக்கலைக் கடைப்பிடித்து வந்ததால் அந்த அரசை எல்லா வகையிலும் உலகமே புறக்கணித்தது. இந்தப் புறக்கணிப்பில் ஆலிவுட்டும் சேர்ந்து கொண்டது. ஆலிவுட் கலைஞர்களில் வெள்ளையர்கள் பெரும்பான்மையாக இருந்தும் அவர்களைத் திரட்டி தென்னாப்பிரிக்காவுக்குப் பாடம் புகட்டியவர் மார்லான் பிராண்டோ.



அவ்வளவு பெரிய பாடம் இல்லையென்றாலும் முத்தையா முரளிதரன் போன்றவர்களின் இரண்டகத்துக்கு நீங்கள் சிறிய பாடமாவது புகட்டலாமே விஜய்? இனஒதுக்கல் கோலோச்சிய காலத்தில் தென்னாப்பிரிக்கா சென்று இசை நிகழ்ச்சிகள் நடத்தி விட்டு வந்த தமிழக பக்திப் பாடகர் பித்துக்குளி முருகதாசை இந்திய அரசு நேரில் அழைத்துக் கண்டித்தது. விளையாட்டுத் துறைப் புறக்கணிப்பால் தலைசிறந்த தென்னாப்பிரிக்க கிரிக்கெட் வீரர்கள் கிரயம் பொல்லாக், பேரி ரிச்சர்ட்ஸ் போன்றோர் தங்கள் கிரிக்கெட் வாழ்வையே இழந்தனர். தம் வாழ்நாளில் ஒரே ஒரு சர்வதேச ஆட்டம் கூட அவர்களால் ஆட முடியவில்லை. கிரிக்கெட் விளையாட்டின் வரலாற்றில் ஒப்பாரும் மிக்காருமில்லாத மட்டையடி வீரராக விளங்கியவர் யார் என்று முத்தையா முரளிதரனிடமே கேட்டுப் பாருங்கள், டான் பிராட்மன் என்ற விடை கிடைக்கும். பிராட்மன் 1971ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்க அதிபர் ஜான் ஃ.பார்ஸ்டரைச் சந்தித்த போது, தென்னாப்பிரிக்க கிரிக்கெட் அணியில் கறுப்பின வீரர்களைச் சேர்த்துக் கொள்ளாமை குறித்துக் கேள்வி எழுப்பினார். அறிவில் பின்தங்கிய கறுப்பர்களால் எப்படி வெள்ளையர்கள் போல் அழகாகக் கிரிக்கெட் விளையாட முடியுமெனக் கிண்டலடித்தார் ஃ.பார்ஸ்டர். "நீங்கள் கேரி சோபர்ஸ் எனும் மாபெரும் கறுப்பினக் கிரிக்கெட்டர் பந்தடித்து ஆடும் ஒயிலையும் மிடுக்கையும் கண்டதில்லையா ஃ.பாஸ்டர்?" எனக் கேட்டார் பிராட்மன். நிறவெறியில் நீங்கள் முரண்டு பிடிக்கும் வரை ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணி ஒருபோதும் தென்னாப்பிரிக்காவில் வாசல் மிதியாது என்று அறிவித்தார்.

மண்டேலா சிறையிலிருந்து மீண்டு வந்ததும், பிராட்மன் குறித்து அன்புடன் வினவினாராம்! விளையாட்டுத் துறையிலான இனஒதுக்கலைக் கைவிட்ட பிறகு தென்னாப்பிரிக்க கிரிக்கெட் அணியை நெல்சன் மண்டேலாவே இந்தியாவுக்கு அழைத்து வந்தார் என்பது உங்களுக்குத் தெரியுமா? கிரகாம் கூச் தலைமையிலான இங்கிலாந்து அணி தடையை மீறி தென்னாப்பிரிக்கா செல்லலாம் என 1982இல் முடிவெடுத்தது. இந்தப் பயணம் கலகப் பயணம் என்றும், பயணம் சென்றோர் கலக அணியினர் என்றும் அழைக்கப்பட்டனர். "ஆல்-ரவுண்டர்" இயான் போதமைத்




தவிர முழு வலிமையுடன் தென்னாப்பிரிக்காவில் களமிறங்கிய இந்த இங்கிலாந்து அணியினரை உலக ஊடகங்களும் அரசியல் தலைவர்களும் கடுமையாக எதிர்த்தனர். அவர்களைக் "கேவலமான பன்னிருவர்" என இங்கிலாந்து நாடாளுமன்றமே வண்ணித்தது. அது மட்டுமல்ல, அந்த அணியினர் பன்னாட்டுக் கிரிக்கெட்டிலிருந்து மூன்றாண்டுக் காலத்துக்கு விலக்கி வைக்கப்பட்டனர்.

இங்கிலாந்தின் தலைசிறந்த மட்டையாளர்களில் ஒருவரான ஜெ.ஃ.ப்ரி பாய்காட் உள்ளிட்டோரின் கிரிக்கெட் வாழ்க்கை அத்துடன் முடிவுக்கு வந்தது.

வரலாற்றில் ஒரே ஒரு முறைதான் இந்தியா டேவிஸ் கோப்பை டென்னிஸ் இறுதிப் போட்டி வரை முன்னேறியது. அது 1974ஆம் ஆண்டு. விஜய் அமிர்தராஜ் ஒற்றையர் ஆட்டத்திலும், விஜய் ஆனந்த் உடன்பிறப்புகள் இரட்டையர் ஆட்டத்திலும் வெளுத்து வாங்கிக் கொண்டிருந்ததால் கோப்பை இந்தியாவுக்கே என்று நம்பப்பட்டது. ஆனால் இந்த இறுதிப் போட்டியில் தென்னாப்பிரிக்காவை எதிர்த்து விளையாட வேண்டிய கட்டாயம். என்ன செய்வது? புறக்கணிப்பது தவிர வேறு வழியில்லை என்று இந்திய அரசு சொல்லி விட்டது. பிற்காலத்தில் ஐநா துணைக்கூட்டம் ஒன்றில் விஜய் அமிர்தராஜ் இது பற்றிப் பேசினார். "அப்போது ஏமாற்றமாக இருந்தாலும் இந்தப் புறக்கணிப்பு எவ்வளவு சரியானது என்பதைத் தெரிந்து கொண்ட போது பெருமைப்பட்டேன்" என்றார். விஜய் அமிர்தராஜுக்குக் கிடைத்த பெருமை சிறிதாவது விஜய் சேதுபதிக்கும் கிடைக்க வேண்டும் அல்லவா?

ஒப்புக் கொண்டதிலிருந்து இப்போது பின்னெடுப்பது உங்களுக்கு சங்கடமாகத் தெரியலாம், ஆனால் எதிர்காலம் உங்களைப் போற்றும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

விஜய் சேதுபதி அவர்களே! முத்தையா முரளிதரன் பற்றிய படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டு ஒப்பந்தம் செய்த பின் எப்படிப் பின்வாங்குவது? என்று நீங்கள் தயங்கத் தேவையில்லை. நம் காலத்தின் தலைசிறந்த பூதியல் (இயற்பியல்) அறிவியலர் ஸ்டீபன் ஹாக்கிங் 2013ஆம் ஆண்டு இசுரேலில் ஒரு கல்வி ஒன்றுகூடலுக்கு வந்த அழைப்பை ஏற்றுக் கொண்டிருந்தார். இசுரேல் நாட்டின் அதிபரும் அதில் கலந்து கொள்வதாக இருந்தது. ஆனால் பாலத்தீனர்களுக்கு எதிராக இசுரேல் நடத்தி வரும் கொடுமைகளைக் கண்டித்து அவர் இம்மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும் என்று பல நண்பர்களும் கேட்டுக் கொண்ட போது அதை ஏற்று இசுரேல் செல்வதில்லை என்று அறிவித்தார். துயருற்ற பாலத்தீன மக்களுக்கு அவரால் முடிந்த ஒரு சிறு ஆறுதல்! உங்கள் சக தமிழர்களுக்கு சிங்களப் பகை புரிந்த கொடுமைகளை நியாயப்படுத்திய ஒருவராக நடிக்க மறுத்து, விஜய், நீங்களும் தரலாமே சிறு ஆறுதல்?

அண்மையில் மறைந்த எஸ்.பி. பாலசுப்ரமண்யம் போன்ற தமிழ்நாட்டுத் திரை ஆளுமைகள் இலங்கை செல்ல ஒப்புக் கொண்டு பிறகு தமிழர்களின் வேண்டுகோளை ஏற்றுப் போகாமலிருந்த செய்தி தெரியுமா உங்களுக்கு? அமிதாப் பச்சன் போன்ற வேற்றுமொழி ஆளுமைகளும் கூட தமிழர்களின் உணர்வை மதித்து இலங்கை நிகழ்ச்சிகளைப் புறக்கணித்தார்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள். சர்வதேச இந்தியத் திரைப்பட விழா சொதப்பியதே. நினைவுள்ளதா? இந்தி நடிகர்கள் கூட தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தார்கள். தமிழராகிய நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்? இனவழிப்புக்கு நீதி கோரித் தமிழினம் கடினமான நீண்ட போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் இக்காலத்தில் நீங்கள் எடுக்கும் முடிவு நீதியை மறுக்கும் இனக் கொலைக் குற்றவாளிகளுக்குத் துணைபோகும் இரண்டகருக்கு ஊக்கமளிப்பதாக இருந்து விடக் கூடாது என விரும்புகிறேன், என கடிதம் எழுதியுள்ளார்.

# GWC
## Gibson Wellness Centre

**வாகன விபத்தில் கடுமையாக காயம் அடைந்தீர்களா?**

We specialize in serious and catastrophic injuries.

**உங்கள் காப்புறுதி நிறுவனத்திலிருந்து உங்களுக்கான தீர்வு கிடைக்கும் வரை**

# $100,000

**வரை வட்டியில்லாத கடனாக பெற்றுக்கொள்ள எங்களை அழையுங்கள்.**

CALL NOW TO RECEIVE UP TO
$100,000 IN INTEREST-FREE LOANS
to assist with your financial needs until you receive a settlement from your insurance company

**If top-notch service is your wish, don't wait, call Thavem Krish**



# டரன் கிருபா
கனேடிய தமிழ் சட்டத்தரணி

Darren Kirupa, J.D.
Barrister & Solicitor

**416.904.9118**

7130 WARDEN AVE, SUITE 606
MARKHAM, ON. L3R 1S2


Amma Brand
இப்பொழுது கனடாவிலும் கிடைக்கின்றது!
Amma
Apple Cider
with Mother Vinegar
LOOSE WEIGHT
HELPS IN :
WEIGHT MANAGEMENT
GLOWING SKIN
GOOD FOR HEART
BLOOD PRESSURE
URIC ACID
NOW IN CANADA
100% Natural
Amma Apple Cider with Mother Vinegar
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471
Premium Quality
Amma
Gingelly Oil
(Contains Permitted Anti-Oxidants)
சுத்தமான நல்லெண்ணெய்
NOW IN CANADA
Import and Deliver
AMMA FOOD INC. 647-832-5471
750ml
375ml
Amma Herbal
Juices
NOW IN CANADA
Jamun with Karela Juice
Aloe Vera Juice
Karela Juice
Amla Juice
Super Energizer
Neem Leaf with Aloe Vera Juice
Body Pain Relax Juice
Aloe Noni with Aloevera Juice
100% HERBAL
100% NATURAL
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471



NATIONAL BANK

**என்னிடம் நீண்டகால கிரடிட் எதுவும் இல்லை. நான் Mastercard® வகை கிரடிட் காட்டுகளுக்கு விண்ணப்பிக்க முடியுமா?**

உங்களிடம் கிரடிட் இல்லையா? அதற்கு எம்மிடம் தீர்வு உள்ளது*

தெரிவு செய்யப்பட்ட வங்கிகளில் உள்ள எங்கள் மொழி ஆலோசர்கள் உரையாடுவார்கள் அல்லது வாடிக்கையாளர்களுக்கான எங்கள் சலுகைகளை இணையத்தில் தேடுங்கள்

உங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்க நாங்கள் இருக்கின்றோம்

**nbc.ca**/tamil

*Our banking offer for newcomers is available to immigrants who have been living in Canada for less than 5 years. Security deposit may be required under certain circumstances. Some conditions apply.® Mastercard is a registered trademark of Mastercard International Incorporated. Authorized user: National Bank.

MEDCENTRE HEALTH
SYNCHRONIZING HEALTH SECTORS

## Markham McNicoll Specialist Clinic (MMSC)

**சிறப்பு மருத்துவ நிபுணர் (Specialist) சேவை எமது கிளினிக்கில் ஆரம்பமாகியுள்ளது.**

**தோல் நிபுணர் (Dermatologist)**

சிறப்பு மருத்துவ நிபுணர் தனாஜன் இராஜகுலேந்திரன்
MD (University of Toronto), PhD (University of Toronto)
ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் தோல் சிகிச்சை நிபுணராக சிறப்புப் பயிற்சி பெற்றவர்.

**வாதநோய் நிபுணர் (Rheumatologist)**

சிறப்பு மருத்துவ நிபுணர் தனு ரூபன்
MD (McMaster University), FRCPC (Internal Medicine)
FRCPC (Rheumatology)
ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் வாதநோய் சிகிச்சை நிபுணராக சிறப்புப் பயிற்சி பெற்றவர்.

இருவரும் தமிழில் உரையாடும் மருத்துவ நிபுணர்கள்.
விரைவில் மேலும் பலதுறை நிபுணர்கள் சேவை ஆரம்பமாகவுள்ளது.

**416 331 8888**

2901 Markham Road, Unit - 7, Scarborough, ON. M1X 0B6
www.medcentrehealth.com



SKN **SKN FINANCIAL**
www.sknfinancial.com




**கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்**

- $ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
- $ புதிய மனைஸ்ன வாங்குவதில் பணச்சிக்கலா?
- $ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
- $ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
- $ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்

முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டது

உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..
குறைந்த வட்டி!..[2% முதல்]
நிறைந்த பெறுமதி!...
www.sknfinancial.com

**SCARBOROUGH**
801 Markham Road
(Painted Post Plaza)
Markham & Ellesmere
647-729-5238

**BRAMPTON**
85 Kennedy Road South, Unit 33
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800

# மாரடைப்புக்கு முன் மிகவும் “முக்கியமான” அந்த 3 மணி நேரம்

***பிரபல இதயநோய் நிபுணர் பேராசிரியர் சொக்கலிங்கம் அவர்கள் சொன்ன தகவல் இது.***
*மாரடைப்பு (Heart Attack) **குறித்த விழிப்புணர்வு***

மாரடைப்புக்குள்ளாகும் ஒருவரை நாம் ஒரு இடத்தில் காண நேரிட்டால் உடனேயே S, T, R என்ற இந்த மூன்றெழுத்துக்களை ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

S = SMILE
T = TALK
R = RAISE BOTH ARMS

ஒரு திருமண நிகழ்விலோ, பொது இடங்களிலோ அல்லது வீட்டில் இருக்கும் போதோ, ஒரு ஆணோ அல்லது பெண்ணோ தடுமாறுவதை, அல்லது கீழே விழுவதைக் கண்டால், உடனே நாம் அவர் மேல் கவனம் செலுத்த வேண்டும்.

ஆனால், அவர் நம்மிடம் தனக்கு *ஒன்றும் இல்லை, நான் நன்றாகத்தான் இருக்கிறேன்* என்றெல்லாம் சொல்லுவார். நாமும், ஏதாவது பித்த மயக்கமாக இருக்கும் என்று லேசாக விட்டு விடுவோம் *ஆனால் உண்மையில் அது ஒரு மாரடைப்புக்கான அறிகுறியாக இருக்கும் என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள்!!*

மாரடைப்பை முன்கூட்டியே உணரக் கூடிய ஒரு உறுப்பு நமது தலைமைச் செயலகமான மூளையாகும். மூளை அறிவிக்கும் முன்னெச்சரிக்கையே அந்த தடுமாற்றமாக இருக்கலாம். அதனை S T R அதாவது,

*SMILE (சிரிக்க சொல்வது)*
*TALK (பேச சொல்வது)*
*RAISE BOTH ARMS (இரண்டு கைகளையும் மேலே தூக்க சொல்வது)*

இது போன்ற செயல்களை செய்யச் சொல்வது மூலம், அவர்களுக்கு ஏற்படப் போகும், மாரடைப்பை (ஹார்ட் அட்டாக்) முன்கூட்டியே கண்டு பிடித்து விடலாம். அதாவது, *இம்மூன்றையும் அவர் சரியாகச் செய்ய வேண்டும்!* இல்லையேல் பிரச்சனை பெரிதுதான்!



உடனடியாக, மருத்துவமனைக்கு கொண்டு செல்வதால், உயிரிழப்பை தடுக்கலாம்.

மருத்துவர்கள் கூறும் எச்சரிக்கை என்ன வென்றால், *இந்த சோதனை செய்த, 3 மணி நேரத்திற்குள் மருத்துவ மனைக்கு வந்து விட்டால் போதும், எளிதாக உயிர் இழப்பை தடுத்து விடலாம்*, என்று உறுதியாக கூறுகிறார்கள்.
இவை மூன்றும், அவர் நல்லபடியாக சரியாக செய்து விட்டார் என்றால், மேலும் உறுதிபடுத்த *ஒரு முக்கியமான செயலை செய்ய வேண்டும்* என்று சமீபத்திய மருத்துவ ஆய்வு கூறுகிறது.

அதாவது, *அவருடை நாக்கை நீட்ட சொல்ல வேண்டும்,*

அவர் தனது நாக்கை நேராக நீட்டிவிட்டார் என்றால், அவர் நார்மலாக, நலமாக உள்ளார் என்று தீர்மானிக்கலாம் அவ்வாறு நேராக நீட்டாமல் *ஒரு பக்கமாக அதாவது வலது அல்லது இடது பக்கமாக வளைத்து நீட்டினால்*, அடுத்த 3 மணி நேரத்திற்குள் எப்பொழுது வேண்டுமானாலும், அவருக்கு அட்டாக் வரலாம்.

இதனை படிக்கும், அன்பர்கள் வீட்டில் உள்ள அனைவரிடமும், உறவினர் களிடமும், நண்பர்களிடமும், ஜாதி, மத பேதமின்றி, மனிதாபிமான அடிப்படையில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துமாறு, கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவர்களின் புள்ளி விவரப்படி, இதனை அனைவரிடமும் எடுத்து சொல்வதன் மூலம் ழ10 சதவீத மரணத்தை தவிர்க்கலாம்ழ என்றும் சொல்கிறார் பிரபல இதயநோய் நிபுணர் பேராசிரியர் சொக்கலிங்கம் அவர்கள்.

# மினுவாங்கொடை என்னும் “கொரோனாச்” சுரங்கம்

**- யாழ்ப்பாணத்திலிருந்து விசாகன்**

மினுவாங்கொடை என்னும் தென்னிலங்கைக் கிராமம் தற்போது இலங்கையர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் உள்ளவர்களால் நன்கு கவனிக்கப்படும் ஒரு இடமாக மாறிவிட்டது.

இலங்கை அரசாங்கமும் இராணுவமும் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய இடங்களில் பல அரச கட்டடங்களை தம்வகமாக்கி அங்கு கொரோனா மீட்ப மையங்களை எற்படுத்தி வடக்கு தமிழ் மக்கள் மத்தியில் ஒரு அச்ச உணர்வை ஏற்படுத்த முனைந்தனர். பல தமிழ் அரசியல் தலைவர்களும் அரசாங்த்தின் இந்த கபடத்தனத்திற்கு தங்கள் எதிர்ப்பைக் காட்டி வந்தனர். ஆனால் அரசாங்கமோ அன்றி இராணுவத்தின் தலைமைப் பீடமோ தமிழ் மக்களின் எதிர்ப்பைக் கண்டு கொள்ளவில்லை.

அதற்கிடையில் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களால் தான் கொரோனா தொற்று பரவுகின்றது என்றும் செய்திகள் வெளியாகின.



ஆனால் திடீரென மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றுள்ள கொவிட்-19 தொற்று நாட்டின் பல பகுதிகளிலும் பதிவாகி வருகிறது.

தற்போது மினுவாங்கொட என்னும் கிராமம் ஒரு கொரோனாச் சுரங்கம் என்று அழைக்கப்படும் வகையில் அங்கு கொரோனா தாண்டவமாடுகின்றது. இந்த கொரோனாச் சுரங்கத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் தொற்று பரவியது தான் இங்கு ஆச்சரியம் மிகுந்ததாக உள்ளது.

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் தாதிமார்கள் பலர் கடமையாற்றியிருந்தாலும் இவர்களால் கூட இந்த தொற்றின் அபாயத்தை புரிந்து கொள்ள முடியவில்லை என்பதே இங்கு ஆச்சரியத்தோடு பார்க்கப்படுகின்ற விடயமாக உள்ளது.

இதன் விளைவாக இத்தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இது பல்வேறு மட்டங்களதும் அவதானத்தை பெற்றுள்ளது. அத்தோடு இதன் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. இத்தொற்று தவிர்ப்புக்கான சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்காதவர்களையும் அவற்றை உதாசீனம் செய்பவர்களையும் மக்கள் மத்தியில் பரவலாக அவதானிக்க முடிகின்றது. இது இத்தொற்று தீவிரமடைவதற்கான வாய்ப்பாகக் கூட அமைந்து விட முடியும்.

தற்போதைய சூழ்நிலையில் அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த வேறு எந்தத் தேவைக்கும் வீட்டுக்கு வெளியே செல்ல வேண்டாம் என்றும், வீட்டுக்கு வெளியில் செல்லும் போது முகக்கவசம் அணிந்து செல்லுமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் முகக்கவசம் அணிதல் தொடர்பில் கவனயீனமும், உதாசீனமும் அதிகரித்துக் காணப்படுகின்றது. குறிப்பாக முகக்கவசத்தை பொறுப்பற்ற விதத்தில் அணிபவர்களையும் பரவலாகக் காணக் கூடியதாக உள்ளது.

கொவிட்-19 தொற்றைத் தவிர்த்துக் கொள்வதற்காக அது தொற்றும் பிரதான வழிகளாக விளங்கும் வாயையும், மூக்கையும் மறைக்கும் வகையில் முகக்கவசம் அணிய வேண்டும். ஆனால், இம்முகக்கவசத்தை முகத்தின் கீழ்த்தாடைக்கும், கழுத்துப் பகுதிக்குமாக அணிந்திருப்பவர்களை பரவலாகக் காண முடிகின்றது. இவ்வாறு முகக்கவசத்தை அணியும் போது நாடிப் பகுதியிலும், கழுத்துப் பகுதியிலும் காணப்படும் நுண்கிருமிகள் சுவாசத்தின் ஊடாக உடலுக்குள் செல்லக் கூடிய அச்சுறுத்தலும் காணப்படவே செய்கின்றது. அதன் விளைவாக வேறுவிதமான ஆரோக்கியப் பாதிப்புகளுக்குக் கூட முகம் கொடுக்க நேரிடலாம்.

இவை இவ்வாறிருக்க, முகக்கவசம் அணிவதை உதாசீனம் செய்வது போன்று சமூக இடைவெளியைப் பேணுவதிலும் அநேகர் அசிரத்தை காட்டுகின்றனர். அத்தோடு கைகழுவுவதில் அக்கறை கொள்ளாதவர்களும் அதிகளவில் இருக்கவே செய்கின்றனர்.

கொவிட்-19 தொற்று, சீனாவின் வூஹானில் தோற்றம் பெற்றது முதல் இற்றை வரையும் உலகிற்கே பெரும் சவாலாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கோ தவிர்த்துக் கொள்வதற்கோ இற்றை வரையும் தடுப்பு மருந்துகள் பாவனைக்கு வராத நிலைமையே நீடித்து வருகின்றது. இவ்வாறான நிலையில் இத்தொற்றைத் தவிர்த்துக் கொள்வதற்கு கைகழுவுதல், முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணல் உள்ளிட்ட அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்கள்தான் முக்கிய வழிமுறைகளாக விளங்குகின்றன. அவற்றையே மருத்துவ நிபுணர்களும் சிபார்சு செய்து வருகின்றனர்.

இருந்த போதிலும் இந்த வழிமுறைகள் தொடர்பில் கவனயீனமாக நடந்து கொள்வதும், அவற்றைப் பொறுப்பற்ற முறையில் பயன்படுத்துவதும் கொவிட்-19 தொற்று அச்சுறுத்தலை அதிகரிப்பதற்கே வழிவகுக்கும். இந்நிலைமையைக் கருத்தில் கொண்டுதான் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கொவிட்-19 தொற்று தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுவோருக்கு எதிராக நீதிமன்றத்தின் ஊடாக நடவடிக்கை எடுப்பதற்கு வழிவகை செய்யும் வகையில் வர்த்தமானி அறிவித்தலை விடுக்க தீர்மானித்திருக்கிறார்.


இதற்கேற்ப இத்தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுவோருக்கு எதிராக 10 ஆயிரம் ரூபாவுக்கு குறையாத அபராதமும், 6 மாதங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனையும் வழங்கப்பட முடியும்.

இது உண்மையில் வரவேற்கத்தக்கதொரு நடவடிக்கையாகும். கொவிட்-19 தொற்றுக்கு எதிரான தனிமைப்படுத்தல் சட்டமானது மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டுதான் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அவ்வாறான ஒரு சட்டம் தொடர்பில் பொறுப்பற்ற வகையில் நடந்து கொள்வதும் அதனை உதாசீனம் செய்வதும் முழுநாட்டு மக்களுக்குமே பேராபத்தாக அமைந்து விட முடியும். ஒரு சிலர் செய்கின்ற செயலால் எல்லா மக்களும் பாதிக்கப்பட இடமளிக்க முடியாது.

அதனால் தனிமைப்படுத்தல் சட்டம் உதாசீனம் செய்யப்படுவது கட்டுப்படுத்தப்பட வேண்டும். இவ்விடயத்தில் சட்டம் ஒழுங்கை அமுல்படுத்தும் தரப்பினர் உச்சபட்ச கவனம் செலுத்த வேண்டும். இதற்குத் தேவையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் மக்கள் அளிக்க வேண்டும். மக்கள் பொறுப்புணர்வோடும், தூரநோக்கோடும் செயற்படும் போதுதான் இத்தொற்றின் அச்சுறுத்தலை கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

ஆகவே கொவிட்- 19 தொற்று தொடர்பான தனிமைப்படுத்தல் சட்டத்தை மதித்து செயற்படுவதில் ஒவ்வொருவரும் அக்கறை காட்ட வேண்டும். அது இத்தொற்றின் பரவலை கட்டுப்படுத்துவதற்கான பெரும் பங்களிப்பாக அமையும். இலங்கை அரசாங்கமும் இலங்கையின் சுகாதாரப் பகுதியும் தங்கள் பணிகளை கவனமாகச் செய்வது போன்று இருந்தாலும் யாழ்ப்பாணம் வரை தொற்றை பரப்பியுள்ள இந்த மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையும் அது அமைந்துள்ள கிராமமும் முழு இலங்கைத் தீவிற்குமே ஒரு அச்சுறுத்தலாக உள்ளது என்றால் அது பொய்யல்ல.

# இலங்கையை சேர்ந்த சர்வதேச போதைப்பொருள் கடத்தல் மன்னன் காஞ்சிபுரத்தில் கைது




காஞ்சிபுரத்தில் 6 மாதங்களாக சட்டவிரோதமாக பதுங்கியிருந்த இலங்கையை சேர்ந்த போதைப்பொருள் கடத்தல் மன்னனை போலீசார் பெங்களூருவில் வைத்து கைது செய்தனர். இலங்கையில் நடந்த பல்வேறு கொலை மற்றும் சர்வதேச போதைப்பொருள் கடத்தல் சம்பவங்களில் தொடர்புடைய கட்டாமினி என்கிற பொன்சேகா அழாகாப்பெரும்மக சுனில் ஜெமினி என்பவரை அந்த நாட்டு போலீசாரும், தமிழக போலீசாரும் தேடி வந்தனர். இவரது பின்னணியிலேயே நிழல் உலக தாதா தாவூத் இப்ராகிம் மற்றும், பல சர்வதேச போதைப்பொருள் கடத்தல்காரர்கள் இருப்பதாக கூறப்படுகிறது.

இந்தநிலையில் சட்டவிரோத போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு இலங்கையில் மரண தண்டனை வழங்கப்படுகிறது. எனவே இலங்கையில் இருந்து தப்பிய கட்டாமினி தமிழகத்தில் தஞ்சம் அடைந்து காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள புதுப்பாக்கம் என்ற இடத்தில் உள்ள தனியார் அடுக்குமாடி குடியிருப்பில் கடந்த 6 மாதங்களாக சட்டவிரோதமாக பதுங்கி இருந்துள்ளார்.இங்கிருந்தபடியே இலங்கை உள்ளிட்ட பல நாடுகளில் போதைப்பொருள் கடத்தலுடன் கட்ட காமினி நேரடி தொடர்பு வைத்திருந்தார். இதனால் அவருடைய தொலைபேசி எண்ணை வைத்து போலீசார் அவரை கைது செய்ய முயன்றனர். இதனை அறிந்த அவர் காஞ்சிபுரத்தில் இருந்து பெங்களூருக்கு தப்பி சென்றுவிட்டார்.இதனை அறிந்த காஞ்சிபுரம் கியூ பிரிவு போலீஸ் தனிப்படையினர் தப்பிச்சென்ற கட்டகாமினியை பெங்களூருவில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்தனர்.

பின்னார் அவரை செங்கல்பட்டு குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதிபதி காயத்ரிதேவி முன்னிலையில் ஆஜர்படுத்தினர். நீதிபதி உத்தரவின் பேரில் பின்னர் அவர் புழல் சிறையில் அடைக்கப்பட்டார்.

# வெற்றிவேல் மறைந்தார் என்ற செய்தியை நம்பமுடியாமல் தவிக்கிறேன்; அமமுக தலைவர் டிடிவி தினகரன் இரங்கல்



அமமுக பொருளாளர் வெற்றிவேல் மறைந்தார் என்ற செய்தியை நம்பமுடிவில்லை என அக்கட்சியின் தலைவர் டிடிவி தினகரன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் பொருளாளராக செயல்பட்டு வந்தவர் முன்னாள் எம்.எல்.ஏ. வெற்றிவேல். இவருக்கு கடந்த 6ந்தேதி கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. கொரோனா பாதிப்பையடுத்து வெற்றிவேல் சென்னை போரூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இதற்கிடையில், கொரோனா பாதிப்பால் சிகிச்சை பெற்று வந்த அமமுக பொருளாளர் வெற்றிவேல் சிகிச்சை பலனின்றி இன்று மாலை உயிரிழந்தார். அவரது மறைவுக்கு அரசியல் கட்சியினர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், வெற்றிவேல் மறைவுக்கு அமமுக கட்சியின் தலைவர் டிடிவி தினகரன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக டிடிவி தினகரன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்ததாவது: ''அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் பொருளாளரும், எனது இனிய நண்பருமான P.வெற்றிவேல் Ex.MLA மறைந்தார் என்ற செய்தியை நம்பமுடியாமல் தவிக்கிறேன். மிகுந்த வேதனையும் சொல்ல முடியாத துயரமும் என் தொண்டையை அடைக்கிறது.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, சசிகலாவின் பேரன்பைப் பெற்றவர். என் மீது அளவிட முடியாத பாசம் கொண்டவர். எதையும் உரிமையோடு பளிச்சென பேசுபவர். 'என்ன நடந்தாலும் நான் தியாகத்தின் பக்கம், உண்மையின் பக்கமே நிற்பேன்' என்று உறுதிபடச் சொல்லி, இறுதிவரை அமமுக மீது அளப்பரிய அன்பு கொண்டிருந்தவர்.

துரோகத்திற்கு எதிராக நடத்தி வருகிற புனிதப் போரில் ஒரு தளபதியாகக் களத்தில் நின்றவர். 'வெற்றிஞ் வெற்றி' என வாய் நிறைய அழைத்து இனி யாரிடம் பேசப்போகிறோம் என்று நினைக்கிற போதே எதற்காகவும் கலங்காத என் உள்ளம் கலங்கித் தவிக்கிறது. வெற்றிவேல் மறைவு கட்சிக்கும், தனிப்பட்ட முறையில் எனக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பு. அவரது மறைவால் வாடும் குடும்பத்தினருக்கும், கழகத்தினருக்கும் ஆறுதல் சொல்ல வார்த்தைகளின்றி தவிக்கிறேன்.

நம்முடைய லட்சியப்பயணத்தில் 'வெற்றிவேல்' என்கிற பெயர் எப்போதும் நிலைத்திருக்கும். அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற வேண்டுகிறேன்''. இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதுச்சேரி கடலில் தற்கொலைக்கு முயன்ற மூதாட்டி; காப்பாற்றி மருத்துவமனையில் சேர்த்த காவலர்களுக்குக் குவியும் பாராட்டு



புதுச்சேரி கடலில் தற்கொலைக்கு முயன்ற மூதாட்டியை காப்பாற்றி மருத்துவமனையில் சேர்த்த தலைமைக் காவலர், காவலரை பொதுமக்கள் பாராட்டி வருகின்றனர். புதுச்சேரி சீகல்ஸ் உணவகத்தின் பின்புறம் இன்று (அக். 15) 63 வயதான மூதாட்டி ஒருவர், கடலில் இறங்கி தற்கொலைக்கு முயன்றார்.

இதனை அறிந்த ஒதியஞ்சாலை தலைமைக் காவலர் சுரேஷ்குமார், காவலர் பாண்டியன் ஆகியோர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று அந்த மூதாட்டியை காப்பாற்றினர். உடனே காவலர் பாண்டியன் அந்த மூதாட்டியை கையில் தூக்கிக்கொண்டு சென்று அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். இதனிடையே கடலில் தற்கொலைக்கு முயன்ற மூதாட்டியை காவலர் பாண்டியன் காப்பாற்றி கையில் தூக்கிச்செல்லும் புகைப்படம் சமூக வலைதளங்களில் பரவியது.

இதனை கண்ட பொதுமக்கள் பலரும் காவலர் பாண்டியன், தலைமைக் காவலர் சுரேஷ்குமார் ஆகியோரை பாராட்டி வருகின்றனர்.இது குறித்து காவலர் பாண்டியன் கூறும்போது, "மூதாட்டி ஒருவர் தற்கொலை செய்து கொள்ள கடலில் இறங்கியுள்ளதாக தகவல் வந்தது.

உடனே நானும், தலைமைக் காவலர் சுரேஷ்குமாரும் அங்கு சென்றோம். அதற்குள் கடற்கரையில் இருந்த சித்தூரைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் சிலர் கடலில் இறங்கி அந்த மூதாட்டியை காப்பாற்றி கரைக்குக் கொண்டு வந்தனர்.இருப்பினும், அந்த மூதாட்டி மீண்டும் கடலில் இறங்கி தற்கொலைக்கு முயன்றார். இதையடுத்து நானும், தலைமைக் காவலரும் அந்த மூதாட்டியை தடுத்து நிறுத்தி காப்பாற்றினோம். அப்போது மயங்கி விழுந்த அவர் சுயநினைவின்றி கிடந்தார்.

உடனே அவரை கையில் தூக்கிக்கொண்டு வேகமாக சென்று புதுச்சேரி அரசு மருத்துவமனையில் அனுமதித்தோம்.பின்னர் நடத்தப்பட்ட விசாரணையில் அந்த மூதாட்டி புதுச்சேரி தருமாபுரி பகுதியை சேர்ந்தவர் என்பதும், வீட்டில் அவருடைய கணவருடன் ஏற்பட்ட தகராறால் மன உளைச்சல் ஏற்பட்டு கடலில் குதித்துத் தற்கொலைக்கு முயன்றதும் தெரியவந்தது" எனத் தெரிவித்தார்.

மூதாட்டியை காப்பாற்றிய காவலர் பாண்டியன் மடுகரை பகுதியையும், தலைமைக் காவலர் சுரேஷ் மணவெளி பகுதியையும் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசு பள்ளி மாணவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்காமல் மருத்துவ சேர்க்கை அறிவிக்கை வெளியிடக்கூடாது: பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தல்

பாமக நிறுவனர் ராமதாஸ் நேற்று வெளியிட்ட அறிக்கை:மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கைக்கான நீட் தேர்வு முடிவு 16ம் தேதி (நாளை) வெளியிடப்பட உள்ளது. ஆனால், அரசு மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கையில், அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவீத இட ஒதுக்கீடு வழங்குவதற்காக அவசர சட்டம் கடந்த 15ம் தேதி நிறைவேற்றப்பட்டு, அதே நாளில் ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

ஒரு மாதம் ஆகியும், பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்டத்துக்கு தமிழக ஆளுநர் இன்னும் ஒப்புதல் அளிக்கவில்லை. சமூக நீதிக்கு எதிரான இந்தச் செயல் கண்டிக்கத்தக்கது. மருத்துவக் கல்லூரிகளில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் சட்டத்துக்கு ஒப்புதல்அளிக்கும் விஷயத்தில் ஆளுநர்தொடக்கம்



முதலே எதிர்மறையாகத்தான் செயல்பட்டு வருகிறார். 7.5 சதவீதஇட ஒதுக்கீடு வழங்கப்பட்டால், நடப்பு ஆண்டில் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 400 மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரிகளில் இடம் கிடைக்கும்.

நீட் தேர்வு முடிவுகள் வெளியான அடுத்த ஓரிரு நாட்களுக்குள் மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கைக்கான அறிவிக்கையை அரசு வெளியிட வேண்டும். அதற்குள் ஆளுநர் இந்த சட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கவில்லை என்றால், நடப்பு ஆண்டில் 7.5 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்படாது.

அடுத்த ஆண்டு முதல் அதை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக அரசு அறிவிக்குமானால் அது சமூகநீதிக்கும், ஏழை மாணவர்களுக்கும் இழைக்கப்படும் துரோகமாக அமைந்துவிடும். எனவே, எந்தெந்த வகைகளில் எல்லாம் ஆளுநருக்கு அழுத்தம் தர முடியுமோ, அந்தந்த வகைகளில் எல்லாம் அழுத்தம் கொடுத்து 7.5 சதவீத இட ஒதுக்கீட்டுக்கு ஒப்புதல் பெற வேண்டும்.

அதன்பிறகு தான் மாணவர் சேர்க்கை அறிவிக்கையை வெளியிட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




கடந்த வாரம் சத்தியன் எடுத்துக் கொண்ட முக்கிய விடயம் தொடர்பாக எழுத ஆரம்பித்து அது நீண்ட ஒரு அரசியல், இலக்கியம் அல்லது சமூகம் சார்ந்த ஒரு தொடராக செல்லுமோ என்ற எண்ணத்தில் தற்காலிகமாக முற்றுப்புள்ளியிட்டு, இந்த வாரம் மீண்டும் தொடர்கின்றன சத்தியன் வசனங்கள்.


கடந்த வாரம் நாம் எழுது எடுத்துக்கொண்ட விடய, 1987ம் ஆண்டு இந்திய இராணுவம் இலங்கையில் தளமிட்டுக் கொண்டு தமிழின அழிப்பிற்கு தயாராகிக் கொண்டிருந்து போது இடம்பெற்ற 12 உயரிய விடுதலைப் புலிகளின் போராளிகள் தங்களை தாமே மாய்த்துக்கொண்டு மண்ணின் விதையாகிப் போன துன்பியல் சம்பவம் தான்.

அவர்கள் மறக்கப்பட வேண்டியவர்கள் அல்ல. ஆண்டாண்டு காலம் அனைவர் மனங்களிலும் நிறைந்திருக்க வேண்டியவர்கள்.

கடந்த வாரம் சத்தியன் இந்த பதிவில் சேர்த்திருந்த புகைப்படங்களில் நான்கு கவிஞர்களும் தோன்றினார்கள். இந்த வாரம் தமிழகக் கவிஞர் தாமரை அவர்களின் புகைப்படமும் இணைக்கப்பட்டுள்ளது.

அதற்கு காரணம் என்னவென்று ஒரு கேள்வி எழமாட்டாது என்பது சத்தியனின் எண்ணம். அல்லது பதிவை தொடர்ந்து வாசிக்கும் போது அது பற்றிய புரிதல் வரும்.

இந்த நாட்களில் இலங்கையின் கிறிக்கட் பந்து வீச்சு வீரர் முரளிதரன், தமிழக நடிகர் விஜேய் சேதுபதி ஆகியோர் தொடர்பான திரைப்படம் பற்றிய செய்திகள் நான்கு திசைகளிலும் பறந்து செல்லுகின்றன. கண்டனங்களும் கூட.



முத்தையா முரளிதரனின் பாத்திரத்தை நடிகர் சேதுபதி ஏற்று நடிக்கவுள்ளதாக வந்த செய்தியை கவிஞர் தாமரை கண்டித்து நடிகர் சேதுபதிக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அது சத்தியன் சார்ந்த பல ஊடகங்களிலும் வெளியாகியுள்ளது.

இந்த வாரம் கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் பற்றிய இன்னும் சில தகவல்களைப் பகிர்ந்து கொள்வேன் என்று சத்தியன் தெரிவித்திருந்தார்.

கவிஞர் தாமரை தமிழ் நாட்டைச் சேர்ந்தவர். எமது ஈழத் தமிழர்கள் தொடர்பான அரசியல் மற்றும் சமூகம் சார்ந்த விடயங்களில் மிகுந்த அக்கறையுடனும் அவதானத்துடனும் செயற்பட்டு வருபவர். ஆனால் எமது நாட்டுக் கவிஞராக நாம் போற்றி வந்த கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் தற்போது “தமிழ்நாட்டுக் கவிஞர் ஆகிவிட்டார். ஆனால் தமிழ் நாட்டுக் கவிஞர் தாமரை அவர்கள் நம் நாட்டுக் கவிஞர் ஆகிவிட்டார். அவருக்கு சத்தியனின் நன்றி.

காசி ஆனந்தன் மற்றும் மாவை சேனாதிராஜா ஆகியோர் தமது அரசியல் பயணங்களில் இந்தியாவை நோக்கிய அக்கறையோடு செயற்பட்டவர்கள் என்பது பலருக்குத் தெரியும்.

இருவருக்கும் பல வேற்றுமைகள் உள்ளன. அரசியல் மற்றும் ஏனைய செயற்பாடுகளில். ஆனால் ஒற்றுமைகளில் ஒன்று இருவரினதும் குடும்பங்களும் தமிழ்நாட்டிலேயே தங்கிவிட்டன. அவர்கள் தற்போது தமிழ்நாட்டு வாசிகள் இருவரின் பிள்ளைகளும் தமிழ்நாட்டு அரசின் கோட்டாவிலே மருத்துவக் கல்விக்கான இடங்கள் வழங்கப்பெற்று தற்பொழுது மருத்துவர்களாக பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள் தமிழ் நாட்டில்.

கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் வன்னியில் இராணுவ சீருடைகளோடு காட்சியளித்து விட்டு தமிழ் நாட்டுக்குச் சென்ற பின்னர் திரும்பவும் வன்னிக்குச் செல்லாமல் இருக்கையில் தலைவர் பிரபாகரன் அவர்கள் தாயகத்திற்கு மீண்டும் வரும்படி வேண்டிக் கொண்டும் கூட கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் தமிழ்நாட்டு வாசியாகவே மாறிவிட்டிருந்தார். இது ஒரு சத்தியனுக்கு கிடைத்த ஒரு தகவல். இது போன்று கிடைக்கின்ற அனைத்து விடயங்களையும் இங்கே பதிவு செய்வதும், சில வேளை, அவசியமற்றுப் போகலாம்.

சத்தியன் மீண்டும் குறிப்பிடுவது இதுதான்: கவிஞர் காசி ஆனந்தனின் கவிதைகளின் நீண்ட நாள் பிரியன் சத்தியன். இது எந்த சந்தர்ப்பங்களிலும் அழியாது. பல தடவைகள் கனடாவில் இல்ககிய நிகழ்ச்சிகளில் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களது கவிதைகளை உதாரணமாக எடுத்து உரையாற்றும் போது சபையில் அல்லது மேடையில் அமர்ந்திருக்கும் ஓரிரு கவிஞர் பெருமக்கள் சத்தியனிடம் “ஏன் எங்கள் கவிதைகள் நீங்கள் உதாரணமாக எடுத்துச் சொல்வதற்கு ஏற்றவை இல்லையோ” அன்பாகக் கடிந்து கொண்ட சந்தர்ப்பங்களையும் சந்தித்தவன் சத்தியன்.

இந்தப் பதிவுகளில், இன்னொரு இடத்தில் நமது காசி ஆனந்தன் அவர்கள் பற்றிய குறிப்பிட வேண்டிய அவசியம் ஏற்படின் நிச்சயம் அவை பதியப்படும்.

சத்தியன் அடுத்து குறிப்பிட விரும்பும் நம் மண்ணின் கவிஞர் - அமரர் சுபத்திரன் - அவர்கள் அவரது கவிதைகளும் சத்தியனுக்கு புதுவைக் கவிஞனின் கவிதைகளைப்போலவோ, காசி ஆனந்தனின் கவிதைகளைப் போலவோ, சுவையுள்ளவையாக இன்று உள்ளன என்றால் பாருங்கள் இலங்கையின் இடது சாரிகளால் நன்கு மதிக்கப்படும் ஒரு கவிஞராகத் திகழ்ந்த கவிஞர் சுபத்திரன் நல்ல சந்தக் கவிதைகளை தனது வாசகர்களுக்காகத் தந்தவர். 1970ம் ஆண்டளவில் வடக்கில் இடம்பெற்ற சமூக அடக்கு முறைகளுக்கும் ஆலயப் பிரவேசம் தொடர்பான போராட்டங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுத்தும் இலக்கியங்கள் படைத்தும் செயற்பட்டவர்கள் அவர்.

ஈழத்தின் பிரபல எழுத்தாளார் டானியல் அவர்களின் யாழ்நகர் தொழிலகத்திற்கு சத்தியன் செல்லுகின்ற வேளைகளில் கவிஞர் சுபத்திரனும் அங்கு வந்திருப்பார். அங்கு வந்து சேரும் அரசியல் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் அனைவரும் (சத்தியன் உட்பட) எழுத்தாளர் டேனியல் அவர்கள் சொல்லுகின்ற பல சுவையான தகவல்களை பக்கத்தில் அவர் “முனீஸ்வரன் கபே”யிலிருந்து பெற்றுத் தரும் சுவையான “பிளேன் ரீ”யையும் அருந்திக் கொண்டு மிகுந்த ஆர்வத்துடன் அனைவரும் கேட்டுக்கொண்டிருப்போம். அங்கு பேசிக்கொண்டிருக்கின்ற சில மணி நேரங்களில் யாழ்ப்பாணச் சமூகம், சமூக ஏற்றத் தாழ்வுகள், இலக்கியப் படைப்புகள் பற்றிய பல தகவலை பாடம் படிக்கும் ஒரு மாணவன் போன்று “சத்தியன்” கற்றுக்கொண்டதை என்று மறக்க முடியாது.

கவிஞர் சுபத்திரன் பற்றிய பல விடயங்கள் சத்தியனை நன்கு ஈர்த்தவையாக இருந்தன. அவற்றுள் பலவற்றைக் குறிப்பிடலாம். ஆனால் மறக்க முடியாத சம்பவம் அல்லது காட்சி என்றால் அவரது இறுதிக் கிரியைகள் மட்டக்களப்பில் நடைபெற்ற அன்று இடம்பெற்றவை.

அப்போது சத்தியன் கல்முனை நகரசபையில் பணியாற்றிக்கொண்டிருந்த காலம். அலுவலக வேலைகளிலும் பார்க்க, அரசியல் மற்றும் இலக்கிய விடயங்களுக்கு முன்னுரிமை கொடுத்து வாழ்ந்த இளமைப் பருவம். நான்கு திசைகளில் எங்கு திரும்பினாலும் இலக்கிய நண்பர்கள். அவர்களின் பலரை இப்போதும் ஞாபகத்தில் கொள்வது வழக்கம் சத்தியனுக்கு.

அவர்களில் பலர் இடதுசாரி கொள்கைகள் கொண்ட இலக்கியவாதிகளின் நண்பர்களாகவும் அவர்களை மதிக்கின்றவர்களாகவும் இருந்தார்கள்.

திடீரென ஒருநாள் நண்பர்களுக்கு செய்தி ஒன்று வருகின்றது. கவிஞர் சுபத்திரன் அவர்கள் மட்டக்களப்பில் தனது இல்லத்தில் காலமாகிவிட்டார் என்று. கல்முனையிலிருந்து பஸ்ஸில் நண்பர்கள் இரட்ணவேல் மாஸ்டர் (சீனன் மாஸ்டர்), சபேசன், யோகராசா என்று பலர் பயணம் செய்து சென்றோம்.

நாம் மட்டக்களப்பிற்கு சென்றபோது கவிஞரின் உடல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுவிட்டது. அங்கு நாம் ஓடிச் சென்றோம். இறுதிக் கிரியைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. நூற்றுக்கணக்கான நண்பர்கள். சிங்கள மொழி பேசுகின்றவர்களும் கொழும்பிலிருந்து வந்திருந்தார்கள்.

அவரது உடலம் எரிப்பதற்கு தயாரான போது திடீரென்று அழுகை ஒலி வானைப் பிளக்கின்றது. ஆச்சரியம் என்னவென்றால், அங்கு வந்து கலந்து கொண்ட சுமார் பத்து சிங்கள மொழி பேசும் தோழர்கள் கதறி அழுகின்றார்கள் “சகோதரய! சகோதரய!” என்று அப்போது சத்தியன் உணர்ந்து கொண்டது இதுதான். ஒரு கவிஞனாக அரசியல் செயற்பாட்டாளனாக வாழ்ந்த கவிஞர் சுபத்திரன் அவர்கள் தன்னோடு அரசியல் செய்த சிங்களத் தோழர்களையும் இந்தளவிற்கு ஈர்க்கும் அளவிற்கு தனது “பணிகளை” ஆற்றியுள்ளாரே! அது மற்றவர்களால் இயலாது என்று.

சிங்கள மொழி பேசும் தோழர்களால் கூட தாங்கிக் கொள்ள முடியாத ஒரு இழப்பாக கவிஞர் சுபத்திரனின் மறைவு இருந்தது என்பதை நண்பர்கள் நாம் அனைவரும் உணர்ந்து கொண்டு கவிஞர் சுபத்திரனை எம்மனங்களிலிருந்தும் என்றும் அகலாமல் காத்துவருகின்றோம் இன்றும்.

அவரது மறைவு இடம்பெற்றது 1979 அல்லது 1980 ஆக இருக்கலாம். ஆனால் 1971 அல்லது அதற்குப் பின்னராக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சமூக ஏற்றத் தாழ்வுகள் தொடர்பான போராட்டங்களில நேரடியாகப் பங்கு கொண்டு போராடியும் கவிதைகள் படைத்தும் தன்னை இனங்காட்டியவர் கவிஞர் சுபத்திரன் அவர்கள்.

அடக்கு முறைகளுக்கு எதிரான போராட்டங்கள் நடைபெற்ற இடங்களில் மாவிட்டபுரம் மற்றும் சங்கானை மட்டுவில் ஆகியவை நன்கு அறியப்பட்ட இடங்களாக இருந்தன.

அப்போது கவிஞர் சுபத்திரன் அவர்கள் சங்கானையின் நிற்சாமம் என்னும் கிராமத்தைப் பற்றி எழுதிய கவிதை ஒன்றின் இரண்டு வரிகள் கவிதைச் சுவையையும் கோபத்தின் வெளிப்பாட்டையும் நன்கு காட்டிய வரிகளாக இன்றும் சத்தியனின் மனதில் பதிந்த வண்ணம் உள்ளன என்றால் பாருங்களேன்.

*“எச்சாமம் வந்து எதிரிகள் நுழைந்தாலும்*
*நிச்சாமக் கண்கள் நீறாகித் தெறிக்கும்”*

*என்ற வரிகளின் பதிவோடு இந்த வாரப் பதிவு நிறைவு பெறுகின்றது. மீண்டும் அடுத்த வாரம் சந்திப்போம்..*



# இலங்கையில் தமிழ்மொழி மூத்த மொழி, தமிழர் பூர்வ குடிகள்!

- நக்கீரன்



ஒருவர் பேசும் போது இடம், பொருள், ஏவல் அறிந்து பேச வேண்டும் என்று பெரியோர்கள் சொல்வார்கள். பேசும் போது எந்த இடத்தில் பேசுகிறோம் என்ன பொருளில் பேசுகிறோம் என்ன தொனியில் பேசுகிறோம் என்பது முக்கியம்.

இது அன்றைய வட மாகாண சபை முதலமைச்சருக்கும் இன்றைய நாடாளுமன்ற உறுப்பினருமான விக்னேஸ்வரனுக்குத் தெரியாமல் இருக்கிறது. அதாவது எங்கே, எதனைப் பேச வேண்டும் என்ன தொனியில் பேசவேண்டும் என்பது அவருக்குத் தெரியாது இருக்கிறது.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு கடந்த ஓகஸ்ட் மாதம் 21, 2020 (வியாழக்கிழமை) காலை தொடங்கிய பின்னர் புதிய சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்ட மகிந்த யாப்பா அபேவர்தனாவுக்கு வாழ்த்துத் தெரிவித்து உறுப்பினர்கள் பேசினார்கள். அதில் கலந்து கொண்டு உரையாற்றிய நீதியரசர் விக்னேஸ்வரன் "எனது தாய்மொழியில் உங்களுக்கு வாழ்த்துச் சொல்ல விரும்புகிறேன்" எனத் தமிழில் கூறிவிட்டு தொடர்ந்து ஆங்கிலத்தில் உரையாற்றினார். அப்போது "தமிழ் உலகில் உயிர்வாழும் மூத்த மொழிகளில் ஒன்று. அதுவே இந்த நாட்டில் வாழும் முதல் பழங்குடி மக்களின் மொழி" என்றார்.

மேலும் பேசுகையில் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான அனைத்துலக உடன்படிக்கையுடன் (ICCPR) மற்றும் மரபு பாரம்பரிய உரிமைகளின் அடிப்படையில் தேசம் என்று அங்கீகரிக்கப்படுவதன் பிரகாரம் சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடைய வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் உள்ளார்ந்த உரிமைகளை அங்கீகரிப்பதுடன் கடந்த காலம் பற்றிய தவறான வரலாற்று கண்ணோட்டங்களை களைந்தால் மட்டுமே சுதந்திரமும் சமத்துவமும் உதயமாக முடியும்" என்று கூறினார். தமிழில் தொடங்கி பின்னர் ஆங்கிலத்தில் உரையாற்றி முடிவில் சிங்கள மொழியில் தனது உரையை நிறைவு செய்தார்.

விக்னேஸ்வரன் தமிழர்கள் இலங்கையின் பழங்குடிகள் என்று பேசியது முற்றிலும் சரியே. அதற்கான சான்றுகள் மகாவம்சத்தில் உள்ளது. ஆனால் விக்னேஸ்வரன் தமிழ் உலகில் உயிரோடு இன்றும் வாழும் மொழி என்று பேசியிருக்க வேண்டியதில்லை என்பது பலரது எண்ணமாக இருக்கிறது.

சிங்கள அரசியல்வாதிகள் யாரும் தமிழ் மூத்தமொழி அல்ல, அது இலக்கிய வளம் நிறைந்த மொழியல்ல எனச் சொல்லவில்லை. மாறாக மூத்த மொழியான தமிழ், இலக்கிய வளம் படைத்த தமிழ் காலத்தால் பிந்தி உருவான சிங்களத்தை அது விழுங்கிவிடும் என்றே பயப்படுகிறார்கள். அதற்கு வரலாற்றில் சான்றுகள் உண்டு.

1944 ஆம் ஆண்டு மே 24 இல் சிங்களத்தை மட்டும் அரசமொழியாகப் பிரகடனப் படுத்த வேண்டும் என ஜே.ஆர். ஜெயவர்த்தன ஒரு தீர்மானத்தை சட்டச சபையில் முன்மொழிந்தார்.

அன்று அரச மொழியா இருந்த ஆங்கிலத்தை அகற்றி, அந்த இடத்தில் பெரும்பான்மை சிங்கள மக்கள் பேசும் மொழியை உத்தியோக மொழியாக அறிவிக்க வேண்டும் என்று தனது உரையில் ஜெயவர்த்தன வேண்டிக் கொண்டார். டொனமூர் அரசியல் யாப்பின் கீழ் நாட்டுமக்கள் அனைவருக்கும் வாக்குரிமை உண்டு - எல்லோரும் இந்நாட்டு மன்னர் - என்ற யாப்பு இயற்றப்பட்ட பின்னணியில்தான் ஜெயவர்த்தன அந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார். அதற்கு முன்னர் ஆங்கிலம் உத்தியோக மொழியாக இருந்தாலும் இலங்கைத் தீவில் பண்டுதொட்டு பேசப்பட்டு வந்த சிங்களம் - தமிழ் இரண்டும் சமவுரிமை கொண்ட மொழிகள் என்ற கோட்பாடே மேலோங்கியிருந்தது.

"நான் எப்போதும் தமிழ்மொழி பேசும் மாகாணங்களில் தமிழ் பேசப்பட வேண்டும் என எண்ணுபவன். தமிழ்மொழி பேசும் மாகாணங்களில் தமிழே ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் எப்போதும் எனக்கு உண்டு. ஆனால் நாட்டில் உள்ள மக்களில் மூன்றில் இரண்டு பங்கினர் சிங்கள மொழி பேசுபவராக இருப்பதால் சிங்களமொழி மட்டுமே இலங்கைத் தீவின் உத்தியோக மொழியாக முன்மொழியும் எண்ணம் எனக்கு இருந்தது. ஆனால் தமிழ் சமூகமும் தமிழ்பேசும் முஸ்லிம் சமூகமும் தமிழ்மொழி சிங்களமொழிக்கு சமமாக சேர்க்க வேண்டும் என விரும்புகிறார்கள். இதில் எனக்கிருக்கிற பெரிய அச்சம் என்னவெனில் முழு உலகத்திலும் சிங்களம் 3,000,000 மில்லியன் மக்களால் மட்டுமே பேசப்படுவதால் அந்த மொழி பாதிக்கப்படக் கூடும். அல்லது சிங்களமொழியோடு தமிழ்மொழியை சமத்துவ நிலையில் வைத்தால் சிங்களமொழி காலப் போக்கில் இல்லாமல் போகக் கூடும்."

தமிழ்மொழி இந்தியாவில் 40,000,000 மில்லியன் மக்களால் பயன்படுத்தப்படுகிறது, தமிழ் இலக்கியம் மற்றும் தமிழ்ப் பண்பாட்டின் செல்வாக்கு எதிர்காலத்தில் சிங்களமொழிக்கு பாதகமாக அமையக் கூடும் என நினைக்கிறேன். ஆனால் தமிழர்கள் சிங்களமொழிக்கு கொடுக்கப்படும் உரிமைபோல் தமிழ்மொழிக்கும் கொடுக்கப்பட வேண்டும் என விரும்பினால் அந்த நிலையை அடைவதை நாங்கள் தடுக்க வேண்டும் என்று நான் நினைக்கவில்லை." (சட்ட சபை விவாதங்கள், மே 24,1944).

இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய எஸ்டபிள்யுஆர்டி பண்டாரநாயக்க, ஜெயவர்த்தன பேசியதுபோலவே சிங்களத்தோடு தமிழுக்கு சமவுரிமை வழங்கினால் சிங்களமொழியை எதிர்காலத்தில் இழக்க நேரிடும் என அச்சத்தை வெளிப்படுத்தினார்.

"இருப்பினும், ஒரு தேசத்தின் மொழிக்கு முக்கியமான அர்த்தம் உள்ளது. தேசிய பண்பாடு மற்றும் தேசிய முன்னேற்றத்தைப் பாதுகாக்க, சிங்கள மொழி மிகவும் அவசியமானது என்றும் எனவே அந்த மொழி உத்தியோகபூர்வ மொழியாக உருவாக்க வேண்டும் என்றும் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தவரது மனதில் இருந்தாக நான் ஊகிக்கிறேன். ஆகையால், இந்த முதல் கட்டத்தில், இறுதியாக, ஒரு உத்தியோகபூர்வ மொழியாக, ஆங்கில மொழியிலிருந்து நமது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளுக்கு மாற்றம் என்பது மிகவும் விரும்பத்தக்க முயற்சி என்பதில் சந்தேகமில்லை. (சட்ட சபை ஹன்சாட், மே 24,1944).

இந்தக் கட்டத்தில் சட்ட சபையில் பேசிய டி.எஸ் சேனநாயக்கா "ஒரு தேசத்தை கட்டியெழுப்புவதுதான் முக்கிய பணியாகும். அதனை ஒரு மொழிக்குப் பதில் இரண்டு மொழிகளால் கட்டியெழுப்புவது அவசியமாகும்" என்றார்.

இந்தப் பிரேரணைக்கு எதிராக அன்றைய திருகோணமலை - மட்டக்களப்பு சட்ட சபை உறுப்பினர் ஜி. நல்லையா ஒரு திருத்தத்தை முன்மொழிந்தார். எங்கு சிங்களம் என்ற சொல் வருகிறதோ அதை அடுத்து தமிழ்மொழி என்ற சொல்லையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே அந்தத் திருத்தம் ஆகும். அவர் முன்மொழிந்த திருத்தம் பெரும்பான்மை வாக்குகளால் யினரால் (ஆம் 29 இல்லை 8) நிறைவேற்றப்பட்டது.

(தொடர்ச்சி 19ம் பக்கம்)



# இவ்வார ராசிபலன்

**16-10-2020 வெள்ளி தொடக்கம் 22-10-2020 வியாழன் வரையும்**




**மேஷம்:** வேண்டாத நட்புக்கள் விலகி ஓடக்கூடிய வாரம். புது முயற்சிகள் பலன் அளிக்கும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பாலிய நண்பர் சந்திப்பு கிட்டும். பொருளாதாரம் மேம்படும். பேச்சில் கவனம் தேவை. கடன் பாக்கிகள் வசூலாகும். வாகன யோகமுண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். சகோதர வழியில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: கைலாசநாதப் பெருமாள்
அதிர்ஷ்ட எண்: 6,0,7,4: அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை
அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**ரிஷபம்:** கண்ணும் கருத்துமாக செயல்பட்டு பொன்னும், பொருளும் சேர்க்கக்கூடிய வாரம். கடன்சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். அணிமணிகள் சேரும். பெண்களுக்கு யோகம் கூடும். பணப்புழக்கம் சரளமாகும். பைரவ வழிபாட்டால் பாவம் தீரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: அங்காள பரமேஸ்வரி, அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**மிதுனம்:** வெறுப்புக்கள் விலகி பொறுப்புக்கள் சேரக்கூடிய வாரம். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். தென்றல் வீசும். எதிர்ப்புகள் விலகும். நோய் அகலும். பெயர், புகழ், கௌரவம், செல்வாக்கு உயரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். வழிபடவேண்டிய தெய்வம்: கனக துர்க்கை அம்மன்
அதிர்ஷ்ட எண்: 5,1,5,0, அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர்,
அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**கடகம்:** கலக்கமான சூழ்நிலைகள் விலகி இணக்கமான சூழ்நிலைகள் ஏற்படக்கூடிய வாரம். பழைய பகை மாறும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பிள்ளைகளால் பெருமை கூடும். புது முயற்சிகள் தள்ளி வைக்கவும். தனவரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். உற்சாகம் அதிகரிக்கும். திடீர் செலவு ஏற்படும். மங்கல செய்தியால் மனம் மகிழும்.
வழிபடவேண்டிய தெய்வம்: அய்யனார் சுவாமி, அதிர்ஷ்ட எண்: 9,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,R




**சிம்மம்:** துயரங்களை துடைத்தெறிந்து உயரங்களை சந்திக்கக்கூடிய உன்னதமான வாரம். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பேச்சில் கனிவு தேவை. களவுப் போன பொருள் திரும்ப கிடைக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: அக்னிலிங்கப் பெருமாள்
அதிர்ஷ்ட எண்: 3,2,7,1, அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம்
அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V





**கன்னி:** நட்டமில்லாத நன்மைகளை சந்திக்கக்கூடிய வாரம். இடமாற்றம் நன்மைத் தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். உத்தியோக உயர்வு கிட்டும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உடன் பிறப்புகளால் உதவி கிட்டும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். மேன்மையான நாள். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பட்டத்தரசியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,F




**துலாம்:** பொறுமையை கடைப்பிடித்து பொறாமையை விரட்டியடிக்கக் கூடிய நாளாக உள்ள வாரம். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் கலை கட்டும். உறவினர் வருகை உண்டு. ஆறுதலான சூழ்நிலை அமையும். பணியில் உயர்வு கிட்டும். கடகாலம் மறையும். பணிவும், துணிவும் கூடும். விவேகமான வாரம். வெளியூர் பயணம் வெற்றி தரும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஹேரம்ப கணபதி, அதிர்ஷ்ட எண்: 9,7,1,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**விருச்சிகம்:** உன்னதமான கிருபைகளும் உண்மையான நன்மைகளும் நடக்கக்கூடிய வாரம். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும் நாள். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: வீர அண்ணாமலையார்
அதிர்ஷ்ட எண்: 5, அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு
அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M




**தனுசு:** முத்தாய்ப்பான முன்னேற்றங்களை சந்திக்கக்கூடிய வாரம். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப் போகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். வழிபடவேண்டிய தெய்வம்: ஜலகண்டேஸ்வரர்
அதிர்ஷ்ட எண்: 4,1,7,8, அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம்
அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J




**மகரம்:** விருப்பங்கள் நிறைவேறி திருப்பங்கள் நடக்கக்கூடிய வாரம். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். பொதுப் பணிகளில் ஆர்வம் ஏற்படும். திருமணத் தடைகள் நீங்கும். புதுத் தொழிலை துவங்கும் வாய்ப்பு உள்ளது. வெளியூர் பயணம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். எண்ணிய காரியம் கை கூடும். புண்ணியஸ்தலம் செல்வீர்கள். வழிபடவேண்டிய தெய்வம்: தேவி செல்வநாயகி
அதிர்ஷ்ட எண்: 9,4,0,7, அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர்
அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R




**கும்பம்:** பணவரவும், பாராட்டும் கிடைக்கக்கூடிய வாரம். இனிப்பான செய்திகள் வரும். பழிச் சொல்லிலிருந்து விடுபடுவீர்கள். சொத்துப் பிரச்சனைகள் தீரும். பணியாட்களால் தொல்லை மாறும். கல்வியில் மந்த நிலை மாறும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். கலைத் தொழில் திருப்பம் வரும். அலுவலகங்களில் பாராட்டு குவியும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவரின் தொல்லைக் குறையும். பிரித்து குடும்பம் ஒன்று சேரும். வழிபடவேண்டிய தெய்வம் : மாங்கல்யேஷ்வரர்
அதிர்ஷ்ட எண்: 1,9,5,2, அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே
அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**மீனம்:** கண்ணியமான புண்ணியம் கிடைக்கக்கூடிய வாரம். மனம் மகிழும் நாள். உழைப்பிற்கான பலனை பெறுவீர்கள். திறமைகள் அதிகமாகும். இன்னல்கள் அகலும். கடன் தீரும். ஆக்கம் அதிகரிக்கும். பழைய பாக்கி வசூலாகும். வியாபாரத்தில் கவனம் தேவை. தன வரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். பழைய நட்பு பலன் தரும். உறவினரால் பாதகம் உண்டு. உடல் நலனில் அக்கறை தேவை. உலோகத் தொழில் உயர்வு தரும். வழிபடவேண்டிய தெய்வம்: அன்னமார் சுவாமி. அதிர்ஷ்ட எண்: 6,0,7,4, அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம்
அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377


## இலங்கையில் தமிழ்மொழி மூத்த மொழி, தமிழர் பூர்வ குடிகள்!

*(18ம் பக்கத் தொடர்ச்சி)*

1944 இல் ஜெயவர்த்தனாவும் பண்டாரநாயக்காவும் சிங்களத்தோடு தமிழுக்கு சமவுரிமை கொடுத்தால் அது சிங்கள மொழிக்கும் சிங்கள பண்பாட்டுக்கும் பாதகமாக அமையும் என்ற அச்சத்தை வெளிப்படுத்தியிருந்தனர். ஐம்பதுகளில் இந்த இருவரும் இருமொழிக் கோட்பாட்டில் இருந்து விலகி தனிச் சிங்களத்துக்கு ஆதரவாக மாறிக்கொண்டார்கள்.

1955 ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தில், அவரது தேர்தல் வெற்றிக்கு முன்னும், அதைத் தொடர்ந்து 1956 ஆம் ஆண்டு உரைகளிலும், சிங்களத்தை ஒரே உத்தியோகபூர்வ மொழியாக மாற்ற வேண்டும் என்று பண்டாரநாயக்க ஐயத்துக்கு இடமின்றி வாதிட்டார். அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் சிங்கள தேசியவாத சக்திகளை ஒன்று திரட்டினார்.

"...சிங்களவர்களின் அச்சங்கள், முற்றிலும் அற்பமானவை என்று ஒதுக்கித் தள்ள முடியும் என்று நான் நினைக்கவில்லை. எட்டு மில்லியன் மக்கள்தொகையில் இந்த நாட்டில் கணிசமான எண்ணிக்கையிலான தமிழர்கள் இல்லை என்று நான் நம்பவில்லை. மேலும் அருகிலுள்ள நாட்டில் நாற்பது அல்லது ஐம்பது மில்லியன் ஜதமிழ்ஸ மக்கள் உள்ளனர். இந்தத் தமிழ் இலக்கியங்கள், தமிழ் ஆசிரியர்கள், திரைப்படங்கள், ஆவணங்கள், பத்திரிகைகள் பற்றி என்ன?" சிங்கள மொழியின் தவிர்க்கமுடியாத சுருக்கம் குறித்து நியாயமற்ற பயம் இருப்பதாக நான் நினைக்கவில்லை. இது ஒரு பயம், அதை ஒதுக்கித் தள்ள முடியாது. (பண்டாரநாயக்க 1963, 394-5).

எனவே தமிழ் மூத்தமொழி என்பதை சிங்கள அரசியல்வாதிகளுக்குச் நாங்கள் சொல்லத் தேவையில்லை. அதை அவர்களில் யாரும் மறுக்கவும் இல்லை. உண்மையில் சிங்கள அரசியல்வாதிகள் பல கோடி மக்களால் பேசப்படும் இலக்கிய வளம் நிறைந்த தமிழ்மொழியின் செல்வாக்கைக் கண்டு அஞ்சுகிறார்கள். அப்படிப் பேசுவது சிங்கள மக்களின் மனதை மேலும் இறுகச் செய்து அச்சத்தையும், அவநம்பிக்கையும் அதிகரிக்கச் செய்யும். முரண்பாட்டை வளர்க்கும். விக்னேஸ்வரனது பேச்சு சிங்கள கடும்போக்கு அரசியல்வாதிகள் மற்றும் பவுத்த தேரர்களுக்கு அவல் கொடுத்தமாதிரி அமைந்துவிடக் கூடிய ஆபத்து இருக்கிறது. சிங்கள - பவுத்த தீவிரவாத தேரர் ஒருவர் கொடுத்த முறைப்பாட்டை அடுத்து விக்னேஸ்வரனை உளவுத்துறை விசாரணை செய்துள்ளது.

விக்னேஸ்வரன் இடம், பொருள், ஏவல் மூன்றையும் மனதில் கொண்டு தமிழின் தொன்மைபற்றிப் பேசாது விட்டிருக்கலாம்.

அடுத்து தமிழ்மக்கள் இலங்கை நாட்டின் மூத்த குடிகள் எனக் குறிப்பிட்டார். அப்படிக் குறிப்பிட்டதில் தவறில்லை. சிங்கள - பவுத்த தேசியவாதிகள் தமிழர்கள் வந்தேறு குடிகள், போர்த்துக்கேயர், கூலிவேலை செய்ய ஒல்லாந்தர் காலத்தில் தமிழ்நாட்டில் இருந்து கொண்டுவரப்பட்டவர்கள். அவர்கள் எங்கிருந்து வந்தார்களோ அங்கு திரும்பிப் போக வேண்டும் என்று குரல் எழுப்புகிறார்கள். ஆனால் சிங்கள - பவுத்த தேசியவாதிகளின் வேத புத்தகமான மகாவம்சம் தமிழர்கள் இலங்கையில் கிமு 200 ஆண்டுகளுக்கு முன் அதாவது இற்றைக்கு 2,200 ஆண்டுகளுக்கு முன்னர் மகாவலி கங்கைக்கு வடக்கே உள்ள நிலப்பகுதியை ஆண்டார்கள் என்பதை பதிவு செய்துள்ளது.

(மிகுதி அடுத்த வாரம்)

- *மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்*




# சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்



அக்டோபர் திங்களில் வரும் இருநாட்கள் தமிழ் அன்னையின் இரு கவி மேதைகளை இறைவனை துதி செய்து பாட அனுப்பி வைத்த திரு நாட்களாகும். இருவரும் தமிழ் சினிமாவிற்கு பாட்டு எழுதிப் புகழுடைத்த மகாகவிகளாகும்.

ஒருவர் "மக்கள் கவிஞர்" பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், அடுத்தவர் கவியரசு கண்ணதாசன். அக்டோபர் 8, 1959 இல் தனது 29 ஆவது வயதில் மக்கள் கவிஞரும், அக்டோபர் 17, 1981இல் 57வது வயதில் கவியரசும் கலைமகள் திருப்பாதங்களில் சங்கமம் ஆன புனித நாட்களாகும்.

கவியரசு கண்ணதாசன் அவர்களது 39 ஆவது ஆண்டு நினைவு நாள் அக்டோபர் 17 ஆகும். முதலில் நமது "மக்கள் கவிஞர்" பட்டுக்கோட்டையார் பாடல் எழுதி சிவாஜி ஐயா நடித்த படங்களைப் பார்ப்போம். அதற்கு முன் அமரர் கல்யாண சுந்தரனாரின் அறுபதாவது ஆண்டு நினைவு நாளில் அஞ்சலி செய்து வணங்குதலாக அந்நாளில் 8-10-1959ல் கவியரசு கண்ணதாசனார் தம்பியின் மறைவை யொட்டி எழுதிய கவிதையில் இருந்து சில வரிகள்... கவியரசு, கல்யாணசுந்தரனார் அன்புடன் தம்பி என அழைப்பதுண்டு. "சின்ன வயது மகன் சிரித்த முகம் பெற்ற மகன் அன்னைக் குணம் படைத்த அழகு மகன் சென்றானே! கன்னல் மொழி எங்கே? கருணை விழி தானெங்கே? மன்னர் மணிமுடியில் வாழ்ந்திருந்த செந்தமிழை தென்னவர் பொருளாக்கித் தீங்கவிதை தந்த மகன், கண்மூடித் தூங்குகிறான் கனவுநிலை காண்கிறான்! விழுதுவிட வந்த மகன் விழுந்துவிட்டான் சாவினிலே் அழுதால் வருவானோ! அரற்றுவதால் கிடைப்பானோ, ஆறோடி நீரோடி அழகிழந்த விழிகளெல்லாம், போராடிக்கொண்டு வரப்போமோ அவனுயிரை! தன்னுயிரை தருவதனால் தங்கமகன் பிழைப்பானோ, என்னுயிரை தருகின்றேன் எங்கே? என் மாக்கவிஞன்... என நீண்டதொரு கண்ணீர் கவிதாஞ்சலியைக் கவியரசு 8.10.1959ல் காணிக்கையாக்கியிருந்தார்!

சிவாஜி ஐயா படங்களான "பதிபக்தி" 1958 "புதையல்" 1957 "புனர்ஜென்மம்" 1961 "இரும்புத்திரை" 1960 "தங்கப்பதுமை" 1959 "பாகப்பிரிவினை" 1959 "அம்பிகாபதி" 1957 ஆகிய திரைச்சித்திரங்களுக்கு அமரர். கல்யாணசுந்தரம் எழுதிய பாடல் வரிகள் என்றும் இனியவை என்றும் கருத்தாழம் மிகுந்தவை மக்களை சிந்திக்கத் தூண்டும் பாடல்களாகும். மக்கள் திலகம் எம்ஜிஆர் அவர்கள் முதன் முதலாக தமிழ்நாட்டின் முதலமைச்சர் நாற்காலியில் அமரும் போது கூறிய வார்த்தைகள் "... இந்த நாற்காலியின் ஒரு கால் தம்பி கல்யாணசுந்தரத்தின் பாடல்களாகும். எனது கொள்கைகளை மக்களிடம் கொண்டு சென்ற பாடல் வரிகளை எழுதிய பெருமகனாகும்". இதைவிடப் பெருமை வேறென்ன வேண்டும். அதே போன்று தான் சிவாஜி ஐயா ஏற்று நடித்த பாத்திரங்களை மேன்மைப்படுத்திய பாடல்களாகும். காதல் பாடல்களில் கூட பொதுவுடைமைச் சிந்தனையை வலியுறுத்தி எழுதிய மகா கவிஞர் பட்டுக்கோட்டையாராகும்! பட்டுக்கோட்டையார் சிவாஜி படத்திற்கு மாத்திரமல்ல எம்ஜிஆர், ஜெமினி, எஸ் எஸ் ஆர், டி ஆர் மகாலிங்கம் என எல்லா நட்சத்திரங்களுக்கும் அவரவர் நடித்த படங்களுக்கு அவரால் எழுதப்பட்ட அனைத்து பாடல்களுமே காலம் கடந்து நிலைத்திருக்கும் பாடல்களாகும். குறிப்பாக அவரது தத்துவப் பாடல்கள் முத்திரை பதித்தவையாகும். உதாரணத்திற்கு முதன்முதலில் "பாசவலை" 1956 படத்திற்கு அவர் எழுதிய.. (இது சிவாஜி படம் அல்ல).

"குட்டி ஆடு தப்பி வந்தால்
குள்ள நரிக்கு சொந்தம்
குள்ளநரி மாட்டிக்கிட்டா
குறவனுக்கு சொந்தம்
தட்டுக்கெட்ட மனிதர் கண்ணில்
பட்டதெல்லாம் சொந்தம்
சட்டப்படி பார்க்கப்போனால்
எட்டடி தான் சொந்தம்!
உனக்கெது சொந்தம்
எனக்கெது சொந்தம் உலகத்துக் கெதுதான் சொந்தமடா!
என்ற பாடல் மனித வாழ்வின் நிலையாமையைச் சொல்லும் காலம் போற்றும் பாடல் வரிகளாகும்!



என்னே துரதிருஷ்டம் காலன் இந்தக் காலக்கவிஞனை வாழ விடவில்லை. 1959ல் வெளிவந்த அரு.ராமநாதனின் கதையான "தங்கப்பதுமை"யில் சிவாஜிக்கு எழுதிய "ஈடற்ற பத்தினியின் இன்பத்தை கொன்றவன் நான் - அவள் இதயத்தில் கொந்தளித்த எண்ணத்தைக் கொன்றவன் நான்! என்றும், ஆரம்பமாவது பெண்ணுக்குள்ளே - அவன் ஆடி அடங்குவது மண்ணுக்குள்ளே... எனும் தத்துவ வரிகளை தனது இருபத்தொன்பதாவது வயதிற்குள்ளாகவே எழுதிச் சென்ற மகா கவிஞன்.

பொதுவுடமைக் கொள்கை பற்றாளனான, கவிஞர் 1959 இல் வெளியான "பாகப்பிரிவினை" படமே சிவாஜி அவர்களுக்கெழுதிய இறுதிப்பாடலாகும். அதுவும் விநாயகப்பெருமானை வணங்குவது போல் சிவாஜி பாடி நடிப்பது.

"ஆனைமுகனே ஆதிமுதலானவனே
பானை வயிற்றோனே பக்தர்களைக் காப்பவனே
மோனப்பொருளே மூத்தவனே கணேசா..
ஏனென்று கேளுமையா - இந்த
ஏழை முகம் பாருமையா..." என்று ஆரம்பிக்கும் பாடலாகும். தொடர்ந்து வரும் பாடல் வரிகளுக்கூடாக ஆற்றில் தண்ணீர் எடுக்க வரும் கிராமத்து பெண்களை கலாய்க்கும் காட்சி அது!

இப்பாடல் காட்சி படமாக்கப்பட்ட பிறகு சிவாஜி அவர்கள் தன் குழந்தையை தாலாட்டும் பாடல் ஒன்று எழுதும்படி அவசரப் படுத்தியபோது "என்னால் உங்கள் அவசரத்திற்கு எழுதமுடியாது. வேண்டுமென்றால் ஏற்கனவே தாலாட்டுப் பாடல்களுக்கு பரிச்சயமான கவிஞர் கண்ணதாசனை கேளுங்கள்", என பட்டுக்கோட்டையார் கூற அங்கிருந்து தான் ஆரம்பிக்கிறது இயக்குனர் பீம்சிங் இயக்கிய "ப" வரிசை படங்களான சிவாஜி படங்களின் பாடல்கள். இயக்குனர் பீம்சிங் இயக்கத்தில் வெளியான சிவாஜி நடித்த "பதிபக்தி"யில் முழு பாடல்களும் பட்டுக்கோட்டையாரே எழுதியிருந்தார். பாகப்பிரிவினையில் இரு பாடலோடு கல்யாணசுந்தரனார் அமரராகி விட்டார். அவர் அமராகும் வரை சிவாஜி அவர்கள் நடிக்கும் கம்பெனிகளுக்கு கவியரசு கண்ணதாசன் அழைக்கப்படுவதில்லை. என்ன காரணம்? கவியரசுவும் சிவாஜியும் ஒரு காலத்தில் திமுகவில் பிரபலமானவர்கள். சிவாஜியின் திருமண வைபவத்தில் கலந்து சிறப்பித்த ஒரு சிலரில் கண்ணதாசனும் முக்கியமானவர். அவ்வளவுக்குத் தோழமையாகவிருந்தவர்களுக்கிடையே ஏற்பட்ட விரிசல் தான் என்ன?

கவியரசு கண்ணதாசன் வசனம் எழுதி சிவாஜி நடித்த படம் "தெனாலிராமன்". இப்படம் வெளிவருவதற்குள் கவிஞருக்கும் சிவாஜிக்கும் இடையே ஏதோ ஒரு கருத்து முரண்பாடு. திமுக கட்சி சார்ந்த விடயமாகவிருக்கலாம்? கவிஞர் "தென்றல்" "கண்ணதாசன்" என இரு பத்திரிகைகளை நடத்தி வந்த நேரத்தில் அவரது பத்திரிகையில் சிவாஜி பற்றி ஒரு கேலிச்சித்திரம் வரைந்திருந்தார். அது என்னவெனில் "தெனாலிராமன்" படத்தில் சிவாஜியை கழுத்துவரை பூமிக்குள் புதைத்து தலையை யானையின் கால் கொண்டு மிதிப்பதாக ஒரு காட்சி வரும். அதையே தனது பத்திரிக்கையில் கேலிச்சித்திரமாக வெளியிட்டு "இது சிவாஜியின் எதிர்காலம் அல்ல" என எழுதியிருந்தார். சிவாஜிக்கும் கவிஞருக்கும் மோதல் ஏற்பட இதுவே காரணமாயிற்று. கண்ணதாசனிடம் உள்ள குணம் விசித்திரமானது ஒரு சமயம் தன்னால் புகழப்பட்டவரையே, இன்னொரு சமயம் இகழ்ந்து பேசுவார் எழுதுவார் சிவாஜி அவர்கள் இச்சம்பவம் குறித்து மனம் வேதனைப்பட்டு இருந்தாலும் உள்ளூர கவிஞரின் கற்பனையை ரசித்து இருப்பார். அவருக்கு தெரியும் கண்ணதாசன் நினைப்பதுபோல் தன்னுடைய எதிர்காலம் யானையின் காலால் நசுக்கப்படுவது போல் இருக்கப்போவதில்லை என்று. அவ்வளவுக்கு தன்னுடைய திறமையிலும் உழைப்பபிலும் அசைக்க முடியாத நம்பிக்கை அவருக்கு. இந்த காலத்தில்தான் சிவாஜியை வைத்து படம் எடுப்பவர்கள் பாடல் எழுத கவிஞர் கண்ணதாசனை நாடுவதில்லை.

"பாகப்பிரிவினை" படத்தில் தாலாட்டுப் பாடலை எழுத கவிஞர் சம்மதம் தெரிவித்த பின் "ஏன் பிறந்தாய் மகனே! ஏன் பிறந்தாய்!" பாடலுடன் மிகுதிப் பாடல்களையும் கவிஞர் எழுதி முடித்தார். படமும் மாபெரும் வெற்றி. பட்டுக்கோட்டையாரும் இயற்கை எய்தியதால் அடுத்தடுத்து இயக்குனர் பீம்சிங் இயக்கத்தில் வெளியான "ப" "பா" வரிசைப் படங்களின் பாடல்கள் யாவும் வெற்றிப் படங்களின் பாடல்கள் ஆயிற்று! சிவாஜியோடு தன்னால் ஒத்துப்போக முடியாது என்பதற்காக அவருடைய படங்களுக்கு பாடல் எழுத மறுத்ததில்லை கவியரசு. அதே போன்று "என்னுடைய படங்களுக்கு கண்ணதாசன் பாட்டு எழுதக்கூடாது" என்று சிவாஜி அவர்கள் தன்னை வைத்து படம் எடுப்பவர்களுக்கு தடையுத்தரவு போட்டதும் கிடையாது. சிவாஜியுடன் நெருக்கம் இல்லாத காலங்களில் கவியரசு அவர்கள் எம்ஜிஆர் இடத்து மிக நெருக்கமாகவும், அவருடைய படங்களுக்கு கதை வசனம் பாடல் எழுதுபவராகவும் விளங்கினார் என்பது கவனிக்கத்தக்கது. தொழில் ரீதியில் சிவாஜி எம்ஜிஆர் என்ற இரு துருவங்களுக்கு இடையே பலத்த போட்டி இருந்த காலத்திலேயே அதிகமான சிவாஜி படங்களுக்கு கவியரசு பாடல்கள் எழுதினார் என்பதையும் நாம் நன்கு கவனிக்கவேண்டும்.



"பாகப்பிரிவினை" பட பாடல்கள் வெற்றி பெற்ற பிறகு சிவாஜியை வைத்து படம் எடுத்த தயாரிப்பாளர்கள் அனைவரும் கவியரசரையே நாடினார்கள். "பாசமலர்" படத்தில் இடம்பெற்ற "மலர்ந்தும் மலராத" என்ற பாடலில் வரும் "நதியில் விளையாடி கொடியில் தலைசீவி நடந்த இளந்தென்றலே" எனும் வரிகளால் கவரப்பட்ட நடிகர் திலகம் பழசையெல்லாம் மறந்து "கவிஞா! நீதாண்டா பிறவிக் கவிஞன்" என்று உற்சாகத்தோடு கவியரசைக் கட்டித் தழுவிக்கொண்டார். அதுமட்டுமல்ல, அன்று இரவே அன்னை இல்லத்தில் பெரிய விருந்து ஒன்றையும் கவிஞருக்கு அளித்து மகிழ்ந்தார். இருவருக்கும் இருந்த கருத்து வேற்றுமை அந்த இரவிலேயே இல்லாத அழிந்தது. புதிய பொழுது மலர்ந்தது. "ப" "பா" வரிசை படங்களில் எல்லாம் தன் கவித்துவத்தை மடைதிறந்த வெள்ளமென அள்ளி வீசினார் கவியரசு. பாடல்கள் கவியரசு கண்ணதாசன் என்று திரையில் எழுதிக் காட்டும் போதே திரையரங்குகளை கரவொலியால் அதிர்ந்தது.

நடிப்பிற்கு கைத்தட்டல் கேட்டதுண்டு, வசனங்களுக்கு கேட்டதுண்டு, இயக்குனர் ஸ்ரீதர் என திரையில் வரும் வேளை கரவொலி எழுப்பியது உண்டு. ஆனால் பாடலாசிரியர் பெயருக்கு கைத்தட்டல் ஒலித்தது கவியரசு அவர்களுக்கு மட்டுமே. பின்னாளில் நடிகர் திலகம் பற்றி கவியரசு குறிப்பிடும்போது, "அயராத உழைப்பாலும், திறமையாலும் பல சோதனைகளைத் தாண்டி ஒருவர் இந்த சினிமா உலகில் முன்னணியில் திகழ்கிறார் என்றால் அவர்தான் சிவாஜிகணேசன் என்று எழுதி விட்டு அமரரானார் "கவியரசு"!

"கல்யாணசுந்தரனே! கண்ணதாசனே! ஓர் பொழுதும், பொல்லாத காரியங்கள் புரியா பண்பினனே! வாழும் தமிழ் நாடும் வளர்தமிழும் கலைஞர்களும் வாழ்கின்ற காலம் வரை வாழ்ந்து வரும் நும் பெயரே!

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# ஈழத்துத் திருக்கோவில்கள் 917



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## அளவெட்டி, ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம், யாழ்ப்பாணம்

''கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தி திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே.''

நாகத்தை வழிபடும் வழக்கம் உலக சரித்திர காலத்திற்கு முற்பட்ட பல்வேறு குழுவினருள்ளும் பரவிக் காணப்பட்டுள்ளது. நாகவணக்கம் மிகத் தொன்மையான வணக்கமுறையாகக் காணப்படுகின்றது. மனிதனின் உடல்நிலை சீரடையவும் அதிஷ்டம் விளையவும் நாகதேவதையை அக்காலமக்கள் வழிபட்டுள்ளார்கள் என பிரபல சரித்திர ஆராய்ச்சியாளர் பர்கூசன் என்பவர் தெரிவித்தள்ளார். இலங்கையிலும், இந்தியாவிலும் வாழ்ந்த நாகர் என்ற இனத்தவர்கள் நாகங்களைத் தெய்வமாக வணங்கியுள்ளனர். ருக்வேத காலத்திலேயே நாகவழிபாடு தோன்றியது என்பது இந்திய ஆராய்ச்சியாளர் பலரின் கருத்தாகக் காணப்படுகின்றது. அதர்வ வேதத்தில் நாகவழிபாட்டு மந்திரங்கள் பல உண்டு. நாகங்களுள் தெய்வீகசக்திபெற்ற தனி இனங்களைப்பற்றி புராணங்களும், இலக்கிய நூல்களும் தெளிவாக விபரித்துள்ளன. நாகதேவதைகள் எழுபத்தெட்டு இருப்பதாக மகாபார்வதம் ஆதிபர்வதம் கூறுகின்றது. இந்தியாவின் பல இடங்களிலும் நாகதேவதைவழிபாடும், நாகதம்பிரான் வழிபாடும் காணப்படுகின்றது. நாகப்புற்றுக்குப் பால்வார்த்து வழிபடும் வழக்கம் புராதன சம்பிரதாயமாகக் காணப்படுகின்றது.

பத்துப்பாட்டு, மணிமேகலை முதலிய பண்டைத்தமிழ் இலக்கியங்களிலும் நாகங்களைப்பற்றிய குறிப்புக்கள் உண்டு. முழுமுதற் கடவுளாகிய சிவன் சர்ப்பத்தை ஆபரணமாக அணிந்திருப்பதும், கண்ணன் பாம்பின் தலைமேல் நடனம் செய்யும் பாதத்துடன் காட்சியளிப்பதும், அமுதம் கடைந்தெடுக்க ஆதிசேடனைக் கயிறாக்கியதும் பாம்போடு தொடர்புடைய தெய்வீக சிந்தனையின் வடிவமாகவே காணப்படுகின்றது. இவ்வாறு தெய்வமாகப் போற்றப்பட்ட நாகத்தினை நாகதம்பிரான் எனப்போற்றி வழிபட ஆரம்பித்த அளவெட்டி மக்கள், நாளடைவில் நாகதம்பிரானுக்குப் பொங்கல், பூசைகளையும் சிறப்பாக நடத்த ஆரம்பித்தனர். ஆயினும் நாளடைவில் முன்பிருந்த மரங்களும் புற்றுக்களும் சிதைவடைந்து காணப்பட, சூழல் முழுவதும் தோட்ட நிலங்களாக மாற்றம் பெற்றதோடு குடியிருப்புக்களும் பெருகியது. மிருகங்களின் பாவனைக்குத் தோண்டப்பட்ட கேணியும் கிணறாகக் கட்டப்பட்டது. இக்கிணறு இவ்வாலயத்திற்கும் தெற்கே காணப்படுகின்றது.

மக்களுடைய அன்றாட வாழ்க்கை மாற்றம்பெற்றபோதிலும் கேணியடி நாகதம்பிரான், எவ்வித கோயிலும் இன்றி மழையிலும், வெய்யிலிலும் திறந்தவெளியிலேயே காணப்பட்டார். நாகதம்பிரானின் வடிவமாக கூம்புவடிவக்கல், ஒரு செப்புக்கம்பியில் செய்த நாகவடிவம், ஒரு வைரவசூலம் என்பன நாளடைவில் அமைக்கப்பட்டது. இந்நிலையைக் கண்ட அன்பரொருவர் நாதகத்பிரானுக்கு ஓலையால் சிறுகொட்டில் ஒன்றைப் போட முற்பட்டபோது, காணி உரிமையாளர் "இது எங்கள் கோயில். இதற்கு கொட்டில் போட நீ ஏன் வந்தாய்" என்று பரிகசித்து கோயிற் கொட்டிலையும் பிடுங்கி எறிந்துள்ளார். மறுநாள் கொட்டிலைப் பிடுங்கியவரின் வீடு ஏராளமான உடமைகளுடன் திடீரென எரிந்து அனைத்துப் பொருட்களும் சாம்பரானது. பேய்க்காணி என அழைக்கப்பட்டு அன்றுதொட்டு இக்காணியில் எவரும் குடியிருக்க முன்வரவில்லை. இக்காணி ஆலயத்தின் தெற்கே காணப்படுகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் காணப்பட்ட இக்காணியையும், இங்கு அமைந்திருந்த வீட்டையும் 1953 ஆம் ஆண்டு அருட்கவி. சீ.விநாசித்தம்பிப் புலவர் அவர்கள் விலைக்கு வாங்கியுள்ளார்.

அருட்கவி. சீ. விநாசித்தம்பிப் புலவர் அவர்கள் பல்கலை வல்லவர். தெய்வீக சிந்தனை கொண்டவர். சாதுக்கள் மற்றும் பெரியவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டவர். ஆரம்பநாட்களில் ஆசிரியராகப் பணியாற்றியவர். 1946 ஆம் ஆண்டிலிருந்து நாவலப்பிட்டி ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் ஆசீர்வாதத்தோடு கதாப்பிரசங்களை செய்ய ஆரம்பித்தார். இக்காலங்களில் அம்பிகையை உபாசித்துப் பாடல்களைத் தானே இயற்றிப் பாடியுள்ளார். இவர் நாவலப்பிட்டியில் பணியாற்றியபோது நாவலப்பிட்டி முத்துமாரியம்மன்மீது ஆராத பக்திகொண்டவராக விளங்கியுள்ளார். ஒருநாள் இவரது கனவிலே ஒரு அழகியபெண் தோன்றி இவரது நாவில் எழுதியதாகவும், அதன்பின்னர் அந்த அம்பிகையின்பேரில் "கபரக்கொல்லை முத்துமாரி அம்மன் அந்தாதி" என்றொரு நூலையும் எழுதியுள்ளார். அருட்கவி. சீ. விநாசித்தம்பிப் புலவர் அவர்கள் கதாப்பிரசங்கம், சொற்பொழிவு போன்றவற்றில் சிறந்து விளங்கியதோடு, சோதிடம், வைத்தியம் ஆகிய துறைகளிலும் கைதேர்ந்தவராக விளங்கிளார். இவ்வாறான பல பெருமைகளைத் தன்னகத்தே கொண்ட அருட்கவி. சீ. விநாசித்தம்பிப் புலவர் அவர்கள் 1953 ஆம் ஆண்டு நாகதம்பிரான் கோவில் அமைந்திருந்த மக்கள் குடியிருக்கப் பயந்த காணியையும் வீட்டையும் விலைக்கு வாங்கினார்.

*வளரும்...*



# அன்பின் தொனி - 582

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**

**தேவனே, உமது சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது**

என் இருதயம் நல்ல விசேஷத்தினால் பொங்குகிறது, நான் ராஜாவைக்குறித்துப் பாடின கவியைச் சொல்லுகிறேன், என் நாவு விரைவாய் எழுதுகிறவனுடைய எழுத்தாணி. எல்லா மனுபுத்திரரிலும் நீர் மகா சவுந்தரியமுள்ளவர், உம்முடைய உதடுகளில் அருள் பொழிகிறது, ஆகையால் தேவன் உம்மை என்றென்றைக்கும் ஆசீர்வதிக்கிறார். சவுரியவானே, உமது மகிமையும் உமது மகத்துவமுமாகிய உம்முடைய பட்டயத்தை நீர் உம்முடைய அரையிலே கட்டிக்கொண்டு, சத்தியத்தினி மித்தமும், நீதியுடன் கூடிய சாந்தத்தினிமித்தமும், உமது மகத்துவத்திலே ஜெயமாக ஏறிவாரும், உமது வலதுகரம் பயங்கரமானவைகளை உமக்கு விளங்கப்பண்ணும். உம்முடைய அம்புகள் கூர்மையானவைகள், அவைகள் ராஜாவுடைய சத்துருக்களின் இருதயத்திற்குள்பாயும், ஜனசதளங்கள் உமக்குக் கீழே விழுவார்கள். தேவனே, உமது சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உமது ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது. நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுக்கிறீர், ஆதலால் தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப்பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம்பண்ணினார். தந்தத்தினால் செய்த அரமனைகளிலிருந்து புறப்படுகையில், நீர் மகி ழும்படி உமது வஸ்திரங்களெல்லாம் வெள்ளைப்போளம் சந்தனம் லவங்கம் இவைகளின் வாசனை பொருந்தியதாயிரு க்கிறது. உமது நாயகிகளுக்குள்ளே அரசரின் குமாரத்திகளுண்டு, ராஜஸ்திரீ ஓப்பீரின் தங்கம் அணிந்தவளாய் உமது வலதுபாரி சத்தில் நிற்கிறாள். குமாரத்தியே கேள், நீ உன் செவியைச் சாய்த்துச் சிந்தித்துக்கொள், உன் ஜனத்தையும் உன் தகப்பன் வீட்டையும் மறந்துவிடு. அப்பொழுது ராஜா உன் அழகில் பிரியப்படுவார், அவர் உன் ஆண்டவர், ஆகை யால் அவரைப் பணிந்துகொள். தீரு குமாரத்தி காணிக்கை கொண்டுவருவாள், ஜனங்களில் ஐசுவரியவான்களும் உன் தயவை நாடி வணங்குவார்கள். ராஜகுமாரத்தி உள்ளாகப் பூரணமகிமையுள்ளவள், அவள் உடை பொற்சரிகையாயிரு க்கிறது. சித்திரத்தையலாடை தரித்தவளாய், ராஜாவினிடத்தில் அழைத்துக் கொண்டுவரப்படுவாள், அவள் பின்னாலே செல்லும் அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகள் உம்மிடத்தில் கூட்டிக்கொண்டுவரப்படுவார்கள். அவர்கள் மகிழ்ச் சியோடும் களிப்போடும் வந்து, ராஜ அரமனைக்குள் பிரவேசிப்பார்கள். உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார் கள், அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாகவைப்பீர். உமது நாமத்தை எல்லாத் தலைமுறைகளிலும் பிரஸ்தாபப்படுத் துவேன், இதினிமித்தம் ஜனங்கள் உம்மை என்றென்றைக்கும் சதா காலங்களிலும் துதிப்பார்கள். **- சங்கீதம் 45: 1-17**

**சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்**

தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர். ஆகையால் பூமி நிலை மாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும், அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பயப்படோம். ஒரு நதியுண்டு, அதின் நீர்க்கால்கள் தேவனுடைய நகரத் தையும், உன்னதமானவர் வாசம்பண்ணும் பரிசுத்த ஸ்தலத்தையும் சந்தோஷிப்பிக்கும். தேவன் அதின் நடுவில் இருக்கிறார், அது அசையாது, அதிகாலையிலே தேவன் அதற்குச் சகாயம் பண்ணுவார். ஜாதிகள் கொந்தளித்தது, ராஜ்யங்கள் தத்தளித்தது, அவர் தமது சத்தத்தை முழங்கப்பண்ணினார், பூமி உருகிப்போயிற்று. சேனைகளின் கர்த்தர் நம்மோடி ருக்கிறார், யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர். பூமியிலே பாழ்க்கடிப்புகளை நடப்பிக்கிற கர்த்த ருடைய செய்கைகளை வந்து பாருங்கள். அவர் பூமியின் கடைமுனைமட்டும் யுத்தங்களை ஓயப்பண்ணுகிறார், வில்லை ஒடித்து, ஈட்டியை முறிக்கிறார், இரதங்களை நெருப்பினால் சுட்டெரிக்கிறார். நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள், ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன். சேனைகளின் கர்த்தர் நம் மோடிருக்கிறார், யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர். **- சங்கீதம் 46: 1-11**

**தேவனுடைய ஜனங்களாகச் சேர்க்கப்படுகிறார்கள்**

சகல ஜனங்களே, கைகொட்டி, தேவனுக்கு முன்பாகக் கெம்பீரசத்தமாய் ஆர்ப்பரியுங்கள். உன்னதமானவராகிய கர்த் தர் பயங்கரமானவரும், பூமியின்மீதெங்கும் மகத்துவமான ராஜாவுமாயிருக்கிறார். ஜனங்களை நமக்கு வசப்படுத்தி, ஜாதிகளை நம்முடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்துவார். தமக்குப் பிரியமான யாக்கோபின் சிறப்பான தேசத்தை நமக்குச் சுதந்தரமா கத் தெரிந்தளிப்பார். தேவன் ஆர்ப்பரிப்போடும், கர்த்தர் எக்காள சத்தத்தோடும் உயர எழுந்தருளினார். தேவனைப் போற்றிப் பாடுங்கள், பாடுங்கள், நம்முடைய ராஜாவைப் போற்றிப் பாடுங்கள், பாடுங்கள். தேவன் பூமியனைத்திற்கும் ராஜா, கருத்துடனே அவரைப் போற்றிப் பாடுங்கள். தேவன் ஜாதிகள்மேல் அரசாளுகிறார், தேவன் தமது பரிசுத்த சிங்கா சனத்தின்மேல் வீற்றிருக்கிறார். ஜனங்களின் பிரபுக்கள் ஆபிரகாமின் தேவனுடைய ஜனங்களாகச் சேர்க்கப் படுகிறார்கள், பூமியின் கேடகங்கள் தேவனுடையவைகள், அவர் மகா உன்னதமானவர்.
**- சங்கீதம் 47: 1-9**

**இந்தத் தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்**

கர்த்தர் பெரியவர், அவர் நமது தேவனுடைய நகரத்திலும், தமது பரிசுத்த பர்வதத்திலும் மிகவும் துதிக்கப்படத்தக்கவர். வடதிசையிலுள்ள சீயோன் பர்வதம் வடிப்பமான ஸ்தானமும் சர்வபூமியின் மகிழ்ச்சியுமாயிருக்கிறது, அதுவே மகாராஜா வின் நகரம். அதின் அரமனைகளில் தேவன் உயர்ந்த அடைக்கலமாக அறியப்பட்டிருக்கிறார். இதோ, ராஜாக்கள் கூடிக்கொண்டு, ஏகமாய்க் கடந்துவந்தார்கள். அவர்கள் அதைக் கண்டபோது பிரமித்துக் கலங்கி விரைந்தோடினார்கள். அங்கே நடுக்கங்கொண்டு, பிரசவவேதனைப்படுகிற ஸ்திரீயைப்போல வேதனைப்பட்டார்கள். கீழ்காற்றினால் தர்ஷீசின் கப்பல்களை நீர் உடைக்கிறீர். நாம் கேள்விப்பட்டபடியே நமது தேவனுடைய நகரமாகிய சேனைகளுடைய கர்த்தரின் நகரத்திலே கண் டோம், தேவன் அதை என்றென்றைக்கும் ஸ்திரப்படுத்துவார். தேவனே, உமது ஆலயத்தின் நடுவிலே, உமது கிருபையைச் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். தேவனே, உமது நாமம் விளங்குகிறதுபோல உமது புகழ்ச்சியும் பூமியின் கடையாந்தர ங்கள் பரியந்தமும் விளங்குகிறது, உமது வலதுகரம் நீதியால் நிறைந்திருக்கிறது. உம்முடைய நியா யத்தீர்ப்புகளினிமித் தம் சீயோன் பர்வதம் மகிழ்வதாக, யூதாவின் குமாரத்திகள் களிகூருவார்களாக.இந்தத் தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன், மரணபரியந்தம் நம்மை நடத்துவார். **- சங்கீதம் 48: 1-14**

தொடரும்...






# Carefirst Family Health Team

## Accepting New Patients



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்


Ontario

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029,    www.carefirstfht.com




# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**

- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**

- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

Life Insurance
Don't think twice
Life Insurance Group Benefits
Critical Illness RRSP / RESP
Disability
Investments
INFORCE LIFE Financial Services Inc.
RESP
Registered Education Saving Plans
40% - 20%
Goverment Grant
Plus additional
15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay)
Thavayogarajah
Insurance and
Investments
Call Ajay:
416.704.8074


TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com


வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705


23rd Years in Publishing

UTHAYAN உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
புதிய வகுப்புகள் ஆரம்பம்
October 2020
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services


ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1
PARK PLAZA (BETWEEN LAWRENCE & EGLINTON)
TORONTO, ON. M1R 1P7
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1280 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 16, 2020

# ‘உலகில் இனப்படுகொலைகள்’ என்ற தலைப்பில் கனடாவில் நடத்தப்பெற்ற இணையவழிக் கலந்துரையாடல்



கனடிய அரசியல்வாதிகள் சிலரை. கனடிய தமிழர் சமூகத்தோடு இணைத்த, இணையவழிக் கலந்துரையாடல்- 09-10-2020 அன்று - வெள்ளிக்கிழமை. மாலை நடைபெற்றது தற்கால தமிழர் அரசியலில் ஆர்வமுடைய சில அன்பர்கள் சிலரின் ஏற்பாட்டில், கடந்த வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற இந்த இணையவழிக் கலந்துரையாடலில் கொன்சர்வேர்ட்டிவ் கட்சியைச் சேர்ந்த Honorable MP, Garnet Genius and Honorable MP Kenny Chiu ஆகிய இரண்டு மத்திய பாராளுமன்ற உறுப்பினர்களும், ஒன்றாரியோ மாகாணப் அரசின் உறுப்பினரான MPP Aris Babikian அவர்களும், ரொரென்ரோ கல்விச் சபையின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்களான திரு பார்த்தி கந்தவேள் மற்றும் திருமதி யாழினி இராஜகுலசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். தமிழர் சமூகத்தைச் சேர்ந்த ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்ட இந்த இணையவழிக் கலந்துரையாடலை திரு விமல் நவரட்னம் இணைப்பாளராகக் கடமையாற்றி சிறப்பாக நடத்தினார்.

இந்த கலந்துரையாடலில் முக்கிய கருப்பொருளாக இருந்தவை இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பாக தற்போது தமிழ் மக்கள் மற்றும் தமிழ் அரசியல்வாதிகள் கொண்டுள்ள கரிசனை அல்லது அக்கறை அத்துடன் அழைக்கப்பெற்ற அரசியல்வாதிகளின் எண்ணங்கள் அல்லது ஆலோசனைகள் ஆகியவையே என்று குறிப்பிடப்பட்டிருந்ததும், கலந்துரையாடலில் மேற்படி விடயங்கள் மட்டுமல்ல, உலகில் இனப்படுகொலைகள் இடம்பெற்ற நாடுகளில் இடம் பெற்ற நேரடியான இனப்படுகொலைகள் மற்றும் உளவியல் ரீதியிலான இனப்படுகொலைகள் ஆகியன பற்றி திருப்தியான முறையில் கலந்துரையாடப்பட்டன என்றே கூறலாம்.

எனினும் அன்றைய இணையவழி கலந்துரையாடலில் நம்மை மேலும் சிந்திக்க வைக்கும் விடயங்களும் பகிர்ந்து கொள்ளப்பட்டன என்பதும், அதுவும் பல்வேறு அரசுகளின் இனப்படுகொலைக்கு எதிராக குரல் கொடுக்கும் அரசியல்வாதிகள் முகம் கொடுக்கும் அச்சுறுத்தல் தொடர்பாகவும் கலந்து கொண்டவர்கள் முதற்தடவையாக அறிந்து கொள்வதற்கும் கிடைத்த சந்தர்ப்பமாகவும் இந்த கலந்துரையாடலை நாம் எடுத்துக் கொள்ளலாம்.

அங்கு முதலில் உரையாற்றிய கனடிய மத்திய பாராளுமன்ற உறுப்பினரான MP Garnet Genius அவர்கள் ஏற்கெனவே தமிழ் மக்களுக்கு நன்கு அறிமுகமானவர்கள். கனடிய பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் இலங்கையில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பெற்ற அநீதிகள், அழிக்கப்பட்ட உயிர்கள் உடமைகள் ஆகியவவை பற்றியெல்லாம் விபரமாக எடுத்துக் கூறும் வல்லமை கொண்டவர். குறிப்பாகச் சொல்லப்போனால், இலங்கையில் தமிழ் மக்கள் இனப்படுகொலை மூலம் கொல்லப்பட்டது, அதற்கு ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைசபையில் நியாயமான நீதி கிடைக்கவில்லை என்ற பல குறிப்புகளை பகிரங்கமாக பேசி வரும் ஒருவர் அவர்.

அவர் தனது உரையில் தான் பல தடவைகள் கடிய பாராளுமன்றத்தில் பிரதமர் அவர்களிடம் சில கேள்விகளைச் சமர்ப்பித்து அதற்கான உரிய நடவடிக்கைகளை கனடிய அரசாங்கம் எடுக்க வேண்டும் என்றும் சில பயணத் தடைகளை இலங்கை அரசின் பிரதிநிதிளுக்கும் இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் விதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டாலும் அதற்கான விரைவான நடவடிக்கைகள் அரசு சார்பாக எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை என்று கூறினார். அவர் மேலும் கூறுகையில் கனடாவிலும் வேறு புலம் பெயர்ந்த நாடுகளிலும் வசிக்கும் இலங்கைத் தமிழர்கள் இலங்கை அரசிற்கு எதிரான இனப்படுகொலை குற்றச்சாட்டுக்கள் தொடர்பான போராட்டங்களை அல்லது அழுத்தங்களை தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

அடுத்து உரையாற்றிய பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்யும் கனடாவின் மத்திய பாராளுமன்ற அங்கத்தவரான MP Kenny Chiu அவர்கள் தனது உரையில் இலங்கை தொடர்பான பல விடயங்களை எடுத்துரைத்து இதற்கெல்லாம் காரணமாக இருக்கும் நாடுகள் முக்கியமாக சீனாவும் ரஸ்யாவுமே என்று குறிப்பிட்டு. இந்த இரண்டு நாடுகளிலிருந்துமே இலங்கை அரசானது தனக்கு எதிராக உள்ள போர்க்குற்றம் தொடர்பான பிரச்சனைகளிலிருந்து சர்வதேச ரீ-தியாக தப்பிக் கொள்ளும் பாடங்களைக் கற்றுக்கொள்கின்றது என்று குறிப்பிட்டார். இந்த பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் கொங்கொங் நாட்டைத் தாயகமாகக் கொண்டவர்கள் என்பதாலும் அவரது பிறந்த நாடும் ஏனைய நாடுகளின் அச்சுறுத்தல்களால் பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றது என்று கூறி கனடாவில் வாழும் தமிழ் மக்களோடு சேர்ந்து இலங்கை அரசின் போர்க்குற்றங்களுக்கு உரிய தண்டனையைப் பெற்றுக்கொடுக்க தன்னால் இயன்ற வகையில் குரல் எழுப்புவதாகவும் குறிப்பிட்டார்.

அடுத்து உரையாற்றிய ஒன்றாரியோ மாகாண கொன்சர்வேர்ட்டிவ் கட்சி அர-சின் உறுப்பினர்களில் ஒருவரான MPP Aris Babikian அவர்கள் தனது உ-ரையில் போர்க் குற்றங்கள் ஒரு சமூகத்தை எவ்வாறு வலிக்குள்ளாக்கி அந்த சமூகத்தை சீரழிக்கின்றன என்பதை நன்கு விளக்கினார். அவர் ஆர்மேனியன் நாட்டைச் சேர்ந்தவராக இருப்பதால் அந்த நாட்டில் துருக்கி தேசத்தின் அரசினால் அரங்கேற்றப்பட்ட இனப்படுகொலைகளைப் போலவே எமது ஈழத்தமிழ் மக்களும் வலிகள் மிகுந்த அனுபவங்களைப் பெற்றுள்ளார்கள் என்றும் எனவே ஈழத்தமிழ் மக்களின் போராட்டங்களுக்க தனது ஆதரவு என்றும் இருக்கும் என்று கூறி, தான் ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றத்தில் ஆர்மேனியன் படுகொலைகள் தொடர்பான ஒரு பிரேரணையைக் கொண்டு வர முயன்றபோது தனக்கு சில வெளிநாட்டு தூதரங்களினால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும், ஆனாலும் தான் சோர்ந்து விடவிலட்லை என்றும் குறிப்பிட்டு எமது தமிழ் ஊடகங்களின் பணிகளையும் அவர் பாராட்டினார்.

அடுத்து ரொரன்ரொ கல்விச் சபையின் தெரிவு செய்யப்பட்ட தமிழ்பேசும் உறுப்பினர்களாக பார்த்தி கந்தவேள், யாழினி ஆகியோர் உரையாற்றினர்.

அவர்களின் திருமதி யாழினி தனது உரையில் தனது அனுபவங்களை எடுத்துக் கூறி தனது இன மக்களுக்காக தொடர்ந்து ஆதரவை வழங்குவதாகவும், இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான சில விடயங்களில் தான் ஈடுபட்டதால் பல சவால்கள் தோன்றியுள்ளதாகவும் ஆனால் அவற்றை கடந்து செல்ல தான் தயாராக இருப்பதாகவும் கூறினார். தொடர்ந்து ஊடக நிறுவனங்கள் சார்பாகவும் வேறு தமிழ் அமைப்புக்கள் சார்பாகவும் சில பிரதிநிதிகள் தங்கள் கருத்துக்களை அங்கு பகிர்ந்து கொண்டனர்.

# திடீரென இடமாற்றம் செய்யப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா

## பழி வாங்கலே ஒரு காரணமா?

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா திடீரென இடமாற்றம் செய்யப்பட்டு, புதிய அரசாங்க அதிபராக இலங்கை நிர்வாக சேவை விசேட தரத்தை சேர்ந்தவரும் , கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி மற்றும் காணி அமைச்சின் செயலாளராக கடமையாற்றியவருமான கே. கருணாகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் அவர் நியமன கடிதத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

அரச அதிபராக கடமையாற்றிய திருமதி. கலாமதி பத்மராஜா, பொது நிர்வாக , மாகாண சபைகள் ,உள்ளூராட்சி அமைச்சிற்கு உடனடியாக அமுலாகும் வரையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லை பகுதியான மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை காணிகளை அம்பாறை பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள சிலர் கிழக்கு மாகாண ஆளுநரின் உத-வியுடன் அபகரித்தமை தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்ததன் பின்னணியிலேயே, ஒரு பழி வாங்கும் நடவடிக்கையாக மேற்படி மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதே கிழக்கு மா-காண மக்களில் பலரது கருத்தாக உள்ளதும், இந்த நிலை தொடருமாக இருந்தால், இனிவரும் காலங்களில் ஒரு அரச அதிகாரியும் அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகளுக்கு எதிரே வாயே திறக்காமல் இருக்கவேண்டுமா என்றும் கிழக்கு மாகாண மக்கள் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

